Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 02 வியாழக்கிழமை (18.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :265

## இணுவில் சம்பவத்துடன் தொடர்புடைய புலிகள் இயக்க உறுப்பினர் கைதாம்!

### கையோடு நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் இரு பொலீஸார் காயம்

யாழ்ப்பாணம்,ஒக.18

யாழ்ப்பாணம், கலட்டிப் பகுதியில் வைத்து நேற்றுப் பொலீஸாராலும், படையினராலும் சுற்றிவளைக்கப்பட்டுக் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி, இணுவிலில் அண்மையில் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தன கொலையுண்ட சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புடையவர் என்று பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ கொழும்பில் தெரிவித்திருக்கிறார். இதேவேளை - பெற்றோரின் வீட்டில் தங்கியிருந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரைக் கைது செய்து பொலீஸ் நிலையம் கொண்டுசெல்ல முயன்ற பொலீஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலீஸ் அதிகாரிகள் கூறுகின்றனர். நேற்றுக்காலை 10.15 மணியளவில் யாழ்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

### கதிர்காமர் கொலை தொடர்பாக விரைவில்நாடாளுமன்ற விவாதம்

கொழும்பு,ஒக.18

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலை தொடர்பாக நாடாளுமன்றத்தில் முழுநாள் விவாதம் நடத்தப்படவேண்டுமென்று ஜே.வி.பி. நேற்று கோரிக்கை விடுத்திருக்கிறது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் ஜே.வி.பி யின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார் .

கதிர்காமர் கொலைச் சம்பவம் தொடர்

(18 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் இயக்கப் போராளி கோபி கடத்தப்பட்டதாக புலிகள் கண்டனம்

## விடுவிக்காவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று எச்சரிக்கை!

யாழ்ப்பாணம்,ஒக.18

**இணுவில் சம்பவத்துடன் தொடர்புபடுத்தி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினராகிய கோபி என்பவரை பொலீஸார் கைதுசெய்திருப்பதற்குப் புலிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றனர். யாழ்ப்பாணம், கலட்டிப் பகுதியில் உள்ள தனது வீட்டில் அவர் தங்கியிருந்த சமயம் நேற்றுக் காலை திடீரென வந்து வீட்டை முற்றுகையிட்ட பொலீஸாரும் படையினரும் அவரைக் கடத்திச் சென்றிருக்கின்றனர் என்று விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர். போராளி கோபியை உடனடியாக விடுவிக்காவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும் புலிகள் எச்சரித்திருக்கின்றனர்.**

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் விடுத்திருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

போராளி கோபி கடத்தப்பட்டிருப்பது குறித்து விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் அப்பட்டமான ஒரு போர் நிறுத்தமீறல் என்றும் புலிகள் தெரிவித்திருக்

(18 ஆம் பக்கம் பார்க்க)

### அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை: நாடாளுமன்றில் இன்று வாக்கெடுப்பு

கொழும்பு,ஒக.18

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் நடைபெறும்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் 10 நாள்களுக்கு பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காகவே இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட வுள்ளது.

ஜனாதிபதியின் அவசரகால பிரகடனத்தை

(18 ஆம் பக்கம் பார்க்க)

**தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்புக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களில் ஒரு தொகுதியினரின் விவரம் 3 ஆம் பக்கத்தில்.**

## இன்றே நாடாளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதி திட்டம்!

கொழும்பு,ஒக.18

அவசரகாலச்சட்டத்தை ஒரு மாதகாலம் நீடிப்பதற்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நாடாளுமன்றத்தை இன்று விசேடமாகக் கூட்டியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. இன்றே நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடவும் அவர் திட்டமிட்டிருக்கிறார் என்று அவருடன் மிக நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. அவருடைய இந்தத் திட்டத்துக்கு அரச கட்சியில் உள்ள பலர் எதிரானவர்களாகவே இருக்கிறார்கள். இதனால் பெரும் சர்ச்சை நிலவுகிறது.

அவசரகாலச் சட்டத்தை ஒரு மாதகாலத்துக்கு நீடித்தால் அதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிப்பு தேர்தல் ஆணையாளரிடமிருந்து வரும் வாய்ப்பு இல்லை. ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடம் நடத்த முடியாமல் செய்வதற்கு நாடாளுமன்றத்தை இன்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் குறித்த மனுக்களை விசாரிக்கும் 5 நீதியரசர்கள் குழுவிற்கு பிரதம நீதியரசர் தலைமை!

கொழும்பு, ஒக.18

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை பிரதம நீதியரசர் தலைமையிலான ஐந்து நீதியரசர்களைக் கொண்ட குழு விசாரணை செய்யவுள்ளது. இது தொடர்பான முடிவு நேற்று எடுக்கப்பட்டது. எதிர்வரும் 22 ஆம் திகதி விசாரணை இடம்பெறும்.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையில் நீதியரசர்களான நிஹால் ஜெயசிங்க, நிஸங்க உதலாகம, நிமல் திஸாநாயக்க, நிமல் காமினி அமரதுங்க ஆகியோரைக் கொண்ட குழுவே விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

பிரதம நீதியரசரின் இந்த முடிவு சட்டத்துறை வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசமைப்பின் நீதிமன்ற நியா

(18 ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சினைகளுக்கு யுத்தம் மாற்றீடல்ல; திணிக்கப்பட்டால் வேறு வழியுமில்லை!

*தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு*

இலங்கையில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு யுத்தம் ஒரு மாற்றீடாக அமையாது. ஆனால், தமிழ்மக்கள் மீது போர் திணிக்கப்பட்டால் அதை எதிர்கொள்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இது அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது. போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பேணுவதில் விடுதலைப் மிகவும் உறுதியாக இருக்கின்றனர்.

இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன். நேற்றுமுன்தினம் கிளிநொச்சி (18 ஆம் பக்கம் பார்க்க)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்த புதிய யோசனைகள்

### பாலசிங்கத்திடம் நோர்வே நேற்று தெரிவிப்பு

லண்டன், ஒக. 18

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைத் தணித்து அமைதி நிலையைப் பேணுவதற்கும், யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்குமான புதிய ஆலோசனைகளை நோர்வே அனுசரணையாளர்கள் விடுதலைப் புலிகளிடம் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் கதிர்காமரின் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக கொழும்பு சென்றிருந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர்ஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசிய பின்னர் நேற்று லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசினர். அப்போதே அவர்கள்

(18 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அமைச்சர் கதிர்காமர் கொலை:

# வீட்டு உரிமையாளருக்கும் புலிகளுக்கும் தொடர்பு ஏதுமில்லை என்கிறது பொலீஸ்

கொழும்பு,ஒக.18

கதிர்காமரைக் கொலைசெய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட வீட்டின் உரிமையாளருக்கும், புலிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்று பொலீஸ் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட வீட்டின் உரிமையாளரான லக்ஷ்மன் தளையசிங்கம் அமைச்சர் கதிர்காமரின் நீண்டகால நண்பர். அரசின் முக்கிய பிரமுகர்கள் உட்பட உயர்மட்டப் பிரமுகர்கள் பலருடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பவர்.

தனது மனைவி பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்ததாலும் அவரது இரண்டு மகன்களும் லண்டனில் வசித்துவருவதாலும் தனிமையைப் போக்கத் தினமும் மது அருந்துவது அவரது வழமை. மதுபானசாலையிலும் இரவு விடுதியிலும் பொழுதைப் போக்கிவிட்டு பின்னிரவிலேயே அவர் வீட்டுக்கு வருவார் என்றும் பொலீஸார் கூறுகின்றனர்.

மிகவிசாலமான அவரது வீட்டில் ஒரு சில அறைகளைத் தவிர பெரும்பாலான அறைகள் பாவிக்கப்படாமல் மூடியே வைக்கப்படுள்ளன. வீட்டின் மேல்மாடிப் பக்கம் தாம் எப்போதாவதுதான் சென்று பார்ப்பார் என்றும், அங்குள்ள அறைகளைத் திறந்து பார்ப்பதே இல்லை என்றும் தளையசிங்கம் புலனாய்வு அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

அவர் மதுபானப் பிரியர் என்பதால் வீடு முழுவதும் மதுபானப் போத்தல்கள் நிறைந்து கிடக்கின்றன. சமையலறைகூட பாழடைந்த நிலையிலேயே இருக்கின்றது. வீட்டில் சமைப்பதைவிட வெளியிலிருந்தே மூன்று வேளையும் உணவுகளை வாங்கிவந்துள்ளார். தம்பதியினரின் இந்த வாழ்க்கை முறையைச் சரியாகத் தெரிந்துகொண்ட தாக்குதலாளிகள் மேற்படி வீட்டைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

வீட்டின் கூரை உட்பட அதன் சுற்றுபுறம் மற்றும் வீட்டிலுள்ள பொருள்கள் அனைத்தையும் பொலீஸார் அக்குவேறு ஆணிவேறாகச் சோதனையிட்டுள்ளனர். கொலையாளிகள் நீண்டகாலம் அங்கு தங்கியிருந்து கதிர்காமரைக் கொலை செய்வதற்குத் திட்டம் தீட்டினர் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தளையசிங்கத்தையும் அவரது மனைவியையும் பொலீஸார் வீட்டுக்காவலில் வைத்திருந்து விசாரித்து வருகின்றபோதும் அவர்களைக் கைது செய்வதற்கான தேவையேற்படவில்லை என்றும் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

லண்டனில் வசிக்கும் தளையசிங்கத்தின் புதல்வர்கள் இருவரையும் நாடு கடத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலீஸ் புலனாய்வுப் பிரிவினர் அரசிடம் கோரிக்கை விடுத்தனர் என்று நேற்றைய சிங்கள நாளிதழ்கள் வெளியிடப்பட்ட செய்தி தொடர்பாகப் புலனாய்வுப் பொலீஸாரிடம் வினவியபோது அது முற்றிலும் தவறான செய்தி எனத் தெரிவித்தனர். (எ-க)

# அப்பாவித் தமிழரை துன்புறுத்த அனுமதி வழங்கவே முடியாது!

## மனோகணேசன் காட்டம்

கொழும்பு,ஒக.18

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி அப்பாவித் தமிழ் மக்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. அதற்கு உடந்தையாகச் செயற்படவும் முடியாது. அதனால் அவசரகாலச்சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களிப்பது என மேல்மாகாண மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது 'என அதன் தலைவர் மனோகணேசன் எம்.பி. கூறினார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்குப்பின், மேல் மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களும் நகரத்தில் வாழும் தமிழ் மக்களும் கடுமையான கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். சாதாரணமாகத் தேசிய அடையாள அட்டை இன்றி நடமாடும் அப்பாவித் தமிழ் மக்கள் முப்படையினரினதும் சித்திரவதைக்கு இலக்காகி வருகின்றனர்.

முன்னாள் அமைச்சர் கதிர்காமரின் படுகொலைச் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து தண்டனைக்குட்படுத்த வேண்டியது அரசின் கடமை. அதற்கு மேல்மாகாண மக்கள் முன்னணி தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கும். ஆனால், கதிர்காமரின் கொலையைக் காரணம் காட்டி அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை ஆதரிக்க முடியாது.

தற்பொழுது நாட்டில் இடம்பெற்றுவரும் நிழல் யுத்தத்தில் ஒரு பகுதிதான் கதிர்காமரின் கொலை. தினசரி இடம்பெறும் கொலைகளில் இதுவும் ஒன்று. கொலைகளைத் தடுத்து நிறுத்த வழிகாண வேண்டுமேயன்றி அவசரகாலச் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்களைத் துன்புறுத்துவதற்கு ஆதரவளிக்கமாட்டோம் எனவும் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக.18

மண்டைதீவில் இன்று நடைபெறவிருந்த மனித உரிமை பயிற்சி ஊக்குவிப்பாளர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடல் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

* * *

யாழ்ப்பாணம்,ஒக.18

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த 'கண்ணீர்ப் பயணங்கள்' நூல் வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் -

வெளியீட்டுத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ)

## விஸ்வகர்ம உபாகருமம்

யாழ்ப்பாணம்,ஒக.18

யாழ்.கன்னாதிட்டி காளியம்மாள் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.15 மணிக்கு விஸ்வகர்ம உபாகருமம் (புதிய பூணூல் தரித்தல்) நிகழ்வு நடைபெறவுள்ளது. விஸ்வகர்ம மக்கள் இதில் கலந்து பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஆனையிறவில் விபத்து: ஆசிரியர் படுகாயம்

வெள்ளாங்குளம்,ஒக.18

ஆனையிறவு உப்பளம் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற சுன்னாகத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் படுகாயமடைந்தார்.

சுன்னாகத்தைச் சேர்ந்தவரும் செட்டிக்குளம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றுபவருமான தர்மலிங்கம் பிரகாஸ் (வயது 24) என்பவரே இந்த விபத்தில் படுகாயமடைந்தவராவார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் , வீதியோரமாகத் தரித்து நின்ற வாகனம் ஒன்றின் மீது மோதியதை அடுத்து இந்த விபத்து நேர்ந்ததாக ஒரு தகவல் தெரிவித்தது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குறிப்பிட்ட ஆசிரியர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (எ-415)

# சந்நிதியில் இன்று தேர்

வடமராட்சி,ஒக.18

பிரசித்திபெற்ற தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி கோயில் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

தீர்த்தத்திருவிழா நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேர், தீர்த்தத் திருவிழாக்களை ஒட்டி வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவினர் சந்நிதி கோயிலை மையமாக வைத்து குடாநாட்டின் சகல பாதைகளிலும் விசேட பஸ் சேவைகளை நடத்த ஒழுங்கு செய்துள்ளனர் என்று பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் கே.யோகநாதன் தெரிவித்தார்.

இவ்விசேட சேவைக்கென யாழ்ப்பாணம் டிப்போ மேலதிகமாக 5 பஸ்களை பருத்தித்துறை டிப்போவுக்கு வழங்கியுள்ளது. இதனைவிட யாழ்ப்பாண டிப்போவும் இத்திருவிழாவுக்கென சில விசேட சேவைகளையும் வழங்கவுள்ளது. என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சிற்றூர்த்திச் சேவைச் சங்கங்களின் சமாசமும் விசேட மினிபஸ் சேவைகளை ஒழுங்குசெய்துள்ளது.

இவைதவிர, குடிதண்ணீர், சுகாதார வசதிகளைப் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் வல்வெட்டித்துறை நகரசபையும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

சந்நிதிச் சூழலில் உள்ள அனைத்து மடங்களிலும் அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன. (9-173)

# சேது சமுத்திரத்திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டமும் ஊர்வலமும்

## இலங்கை பசுமை இயக்கம் நடத்தும்

கொழும்பு ஒக.18

இலங்கை பசுமை இயக்கம் இந்தியாவின் சேது சமுத்திரத் திட்டதை எதிர்த்து எதிர்வரும் 24ஆம் திகதி ஆர்ப்பாட்டமும் ஊர்வலமும் நடத்தவிருப்பதாக அறிவித்துள்ளது.

இவ்வியக்கத்தினர் அன்றைய தினம் நண்பகல் 12.30 மணியளவில் கோட்டை புகையிரத நிலையயத்துக்கு முன்னால் கூடி ஆர்ப்பாட்டம் செய்வதுடன் ஊர்வலமாக இந்திய தூதரகத்துக்குச் சென்று தூதுவர் நிருபமாராவிடம் மகஜர் ஒன்றையும் கையளிப்பர் என்று பசுமை இயக்கத்தின் தலைவர் சுரஞ்சன் கொடிதுவக்கு அறிவித்துள்ளர்.

விஞ்ஞானிகளின் கருத்துப்படி சேது சமுத்திர கால்வாய் கப்பல் போக்குவரத்துத் திட்டம் இலங்கைக்குப் பாரிய பிரதிகூலமான விளைவுகளை ஏற்படுத்தவிருக்கின்றது.

இத்திட்டத்தின் ஆரம்பம் முதற்கொண்ட இதன் எதிர்விளைவுகள் குறித்து இந்தியா மிகவும் பொறுப்பற்றமுறையிலேயே நடந்துகொண்டிருக்கின்றது. இலங்கையிலும் இது தொடர்பான அமைப்புகளும் அக்கறையில்லாமல் இருந்துவருகின்றன. ஓகஸ்ட் முதலாம் திகதி புதுடில்லியில் நடைபெற்ற மாநாட்டில் இலங்கை சார்பில் கலந்துகொண்ட குழுவினர் இந்தத்திட்டம் முன்னெடுக்கப்படுவதற்குச் சம்மதம் தெவித்துள்ளனர். இதனால் இத்திட்டத்துக்கு தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான இன்னுமொரு சந்தர்ப்பத்தை நாம் தவறவிட்டுள்ளோம்.

இவ்வாறு பசுமை இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் ஞாயிறன்று கலாசார விழா

வவுனியா,ஒக.18

வவுனியா மாவட்ட கலாசார விழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வவுனியா மாவட்ட அரச அதிபர் சின்னத்தம்பி சண்முகம் நேற்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஷால்ஸூம் கலந்துகொண்டார். மூவின மக்களின் கலாசாரத்தினை முன்னிலைப்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெறவிருப்பதாக அரச அதிபர் சண்முகம் அறிவித்துள்ளார். (எ-164)

## நிறைநிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக.18

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடத்தும் நிறைநிலா நாள் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் 'பெண் படைப்பிலக்கிய வாதிகளின் ஆளுமை' என்னும் தலைப்பில் சி.ரமேஸ் கருத்துரை வழங்குவார். (எ-202)

## மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக.18

மிதிவெடி செயற்பாட்டு வாரத்தை முன்னிட்டு இன்று தொடக்கம் தொடர்ந்து 3 தினங்களுக்கு விழிப்புணர்வு தொடர்பான கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை யாழ்.புனித மரியாள் பாடசாலையில் முன்றிலில் (சிங்கள மகாவித்தியாலய மைதான முன்றிலில்) இக் கண்காட்சி நடைபெறும்.

யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் ஒருங்கிணைவுடன் மிதிவெடி செயற்பாட்டின் பங்குதாரர் நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் மிதிவெடி செயற்பாடுகள் தொடர்பாக இக் கண்காட்சி நடத்தப்படுகின்றது. (எ-202-204)

## நல்லூரில் இன்று கணபதிப்பிள்ளையின் பாட்டு

யாழ்ப்பாணம்,ஒக.18

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி நல்லூர் இளங் கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளையின் பாட்டு இடம் பெறும். (முன்னர் வந்த செய்தி 9 ஆம் பக்கத்தில்) (எ)

## ஆவணிப் பூரணை தின விழா

யாழ்ப்பாணம்,ஒக.18

கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமம் நடத்தும் ஆவணிப் பூரணை தின விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சாவற்கட்டு தாரகா விதவைகளுக்கான மலரும் மையத்தில் நடைபெறவுள்ளது.

தாரகா விதவைகளுக்கான மலரும் மையத்தின் தலைவி திருமதி இ.சைலா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தூய அன்னை நமக்கோர் உந்து சக்தி என்னும் தலைப்பில் சேவாச்சிரம உறுப்பினரும் மருத்துவ பீட மாணவியுமான கு.கலைவாணி ஆன்மீக உரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து எழுந்திரு! விழித்துக்கொள்! என்னும் தலைப்பில் கண்காட்சியும் அன்னை ஸ்ரீ சாரதா தேவியரின் வாழ்க்கை வரலாற்று வீடியோப் படக்காட்சியும் காண்பிக்கப்படும். (எ-202)

## நாதோபாஸன ஆராதனை

யாழ்ப்பாணம்,ஒக.18

இணுவையூர் மா.த.ந.வீரமணி ஐயரின் பௌர்ணமி தின நாதோபாஸன ஆராதனை நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இணுவில் மஹாவித்துவான் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இன்னிசைச் செல்வர் க.ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் குணராஜா நக்கீரனின் பாட்டுக்கு பக்க வாத்தியங்களாக அ.ஜெயராமன் - வயலின், க.நந்தகுமார் - மிருதங்கம், எஸ்.உமைகாந்தன் - கெஞ்சிரா, எஸ்.விமல்சங்கர் - முகர்சிங் ஆகியோர் வாசிப்பர். (எ-202)

## சரசாலை பொதுநூலகம் நாளை திறந்து வைப்பு

தென்மராட்சி,ஒக.18

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூல் நிலையக் கட்டடம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.செலயக திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தினை திறந்து வைக்கவுள்ளார்

சபைச் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராக யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் வீ.இராசையாவும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரனும் கலந்துகொள்வர். 1980ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பொது நூலக கட்டடம் 2000ஆம் ஆண்டு இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்ததுடன் நூல்நிலையத்திலிருந்த புத்தகங்கள், தளபாடங்கள் காணாமாற்போனமையும் குறிப்பிடத்தக்கது. (எ-117)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

கிளிநொச்சி, ஓக.18

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புக்கு 12 ஆயிரத்து 700 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு தொகுதியினரின் பெயர்கள் இன்று பிரசுரமாகின்றன. கடன்மீளளிப்புத் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் விடுத்துள்ள அறிவுறுத்தல்கள் வருமாறு:-

கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகை தந்து கடனை மீளப்பெற வேண்டும்.

ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதர வேண்டும் அல்லது கடன் சான்றிதழாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளர் வழங்கிய கடிதத்தைக் கொண்டுவர வேண்டும்.

கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்னுரித்தாளர் இறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழின் (பிரதி), கடன் சான்றிதழ், பின்னுரித் தாளரின் அடையாள ஆவணம், பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம் ஆகியவற்றை எடுத்துவரவேண்டும்.

கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்திக் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

மீளளிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும். அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப் படத்தின் (2.5. அங். து 2 அங். அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரச அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

கடன் சான்றிதழைத் தவறவிட்டவர் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம் எடுத்துவர வேண்டும்.

கடன் சான்றிதழாளரும் மறு உரித்தாளரும் இறந்திருப்பின் சட்ட முறையான உரித்தாளருக்கும் சட்டமுறையான உரித்தாளர் ஒருவருக்கு மேற்படின் உரித்துடைய அனைவருக்கும் வழங்கப்படும். உரித்துடையவர்களில் எவராவது ஒருவர் ஏனையோரின் எழுத்து மூலமான ஒப்புதலுடன் மீளப்பெற்றுக்கொள்ளலாம். அவ்வொப்புதல் கிராமசேவையாளராலும் உதவி அரசாங்க அதிபராலும் உறுதிப்படுத்தபபடவேண்டும். சட்டமுறையான உரித்தாளர் யார் என்பதை முறைப்படி உறுதிப்படுத்த கடன் சான்றிதழாளரின் இறப்புச் சான்றிதழ், மறு உரித்தாளரின் இறப்புச் சான்றிதழ், இரண்டினதும் பிரதிகள், கடன் சான்றிதழ், கடனை மீளப்பெறவுள்ளவரின் அடையாள ஆவணம், கடனை மீளப் பெறவுள்ளவரின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளரால் வழங்கப் பட்ட கடிதம், மறு உரித்தாளரின் சட்டமுறையான உரித்தாளர் எத்தனை பேர் என்பதனையும் யார் யாரென்பதையும் உறுதிப்படுத்திக் கிராமசேவையாளரும் உதவி அரசாங்க அதிபரும் வழங்கிய கடிதம் ஆகியவை சமர்ப்பிக்கப்படவேண்டும். - இவ்வாறு நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு
மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

| | |
|---|---|
| மா/ 2 | பொன்னம்பலம் திருஞானசம்பந்தபிள்ளை |
| மா/ 11 | சின்னத்துரை குமாரசாமி |
| மா/ 20 | யோன்பிள்ளை கிறகரி |
| மா/ 27 | மார்க்கண்டு கனகரட்ணம் |
| மா/ 29 | திருமதி குணரெத்தினம் அன்னப்பா |
| மா/ 51 | கோவிந்தா பசுபலிங்கம் |
| மா/ 54 | அருணாசலம் இராசலிங்கம் |
| மா/ 57 | முத்து சுந்தரமூர்த்தி |
| மா/ 64 | பொன்னம்பலம் செல்வரெத்தினம் |
| மா/ 83 | திருமதி யோகரத்தினம் செல்லத்துரை |
| மா/ 89 | திருமதி புனிதவதி மகாலிங்கம் |
| மா/ 96 | திருமதி மனோன்மணி பொன்னம்பலம் |
| மா/ 104 | முத்து இராசேந்திரம் |
| மா/ 107 | திருமதி அரியமணி றிச்சேட் |
| மா/ 110 | துரையப்பா செல்வரத்தினம் |
| மா/ 134 | வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை |
| மா/ 140 | மயிலு தர்மரத்தினம் |
| மா/ 147 | நாகலிங்கம் சிவபாலசிங்கம் |
| மா/ 151 | நாகமுத்து தர்மலிங்கம் |
| மா/ 158 | திருமதி ஞானாம்பிகை செல்வரட்ணம் |
| மா/ 160 | திருமதி செல்வமணி செல்லத்துரை |
| மா/ 169 | திருமதி பத்மாவதி மதியாபரணம் |
| மா/ 170 | கணபதிப்பிள்ளை சின்னத்துரை |
| மா/ 171 | சின்னையா இராமதிலகம் |
| மா/ 175 | திருமதி வடிவம்மா மார்க்கண்டு |
| மா/ 178 | வயித்திலிங்கம் ஆறுமுகராசா |
| மா/ 188 | இராசையா கமலேந்திரம் |
| மா/ 195 | காராளபிள்ளை கிருஷ்ணசாமி |
| மா/ 197 | வேலுப்பிள்ளை மகாதேவன் |
| மா/ 199 | திருமதி மகேஸ்வரி தங்கவேலு |
| மா/ 215 | செல்லையா இரத்தினசிங்கம் |
| மா/ 217 | பொன்னுத்துரை சத்தியமூர்த்தி |
| மா/ 221 | சின்னையா சண்முகலிங்கம் |
| மா/ 224 | செல்லப்பா செல்லத்துரை |
| மா/ 234 | திருமதி திலகவதி பாலசுந்தரம் |
| மா/ 235 | இராசரத்தினம் துரைசாமி |
| மா/ 248 | சின்னத்தம்பி இராசையா |
| மா/ 249 | திருமதி சீதாதேவி முத்துராசா |
| மா/ 252 | சுந்தரம் வடிவேலு |
| மா/ 254 | திருமதி இரத்தினம் அமிர்தலிங்கம் |
| மா/ 256 | காராளபிள்ளை வன்னியசிங்கம் |
| மா/ 260 | திருமதி திலகவதிஅம்மா செல்வரத்தினம் |
| மா/ 263 | சாமுவேல்ஜெயசேனன் லூயிஸ் |
| மா/ 266 | இராமலிங்கம் பத்மநாதன் |
| மா/ 277 | திருமதி சரஸ்வதி இராசதுரை |
| மா/ 289 | திருமதி மேகலாம்பிகை சபாலிங்கம் |
| மா/ 290 | திருமதி கவுசலா பொன்னம்பலம் |
| மா/ 303 | திருமதி பரமேஸ்வரி பொன்னையா |
| மா/ 305 | கந்தர் பொன்னுத்துரை |
| மா/ 311 | மாணிக்கம் சண்முகராஜா |
| மா/ 315 | திருமதி சரஸ்வதி கந்தையா |
| மா/ 325 | கந்தையா தம்பிப்பிள்ளை |
| மா/ 326 | தம்பிப்பிள்ளை தம்பித்துரை |
| மா/ 331 | இஸ்தாக்கி வரதராசா |
| மா/ 335 | திருமதி அன்னரத்தினம் நடராஜா |
| மா/ 363 | நடராசா பொன்னுத்துரை |
| மா/ 370 | திருமதி சறோஜினிதேவி இராசையா |
| மா/ 383 | நாகலிங்கம் சண்முகநாதன் |
| மா/ 388 | கந்தையா தளையசிங்கம் |
| மா/ 395 | சோமசுந்தரம் அமிர்தலிங்கம் |
| மா/ 399 | கணபதிப்பிள்ளை பாலசுந்தரம். |
| மா/ 400 | கனகரத்தினம் பாலசுப்பிரமணியம் |
| மா/ 424 | சதாசிவம் குலசேகரம் |
| மா/ 442 | தில்லையம்பலம் நடராசா |
| மா/ 451 | கந்தையா பேரானந்தம் |
| மா/ 460 | பிள்ளையார் ராசையா |
| மா/ 468 | நவரட்ணம் சிவஞானம் |
| மா/ 494 | சின்னத்துரை துரைசிங்கம் |
| மா/ 499 | ஆறுமுகம் தியாகராசா |
| மா/ 502 | நாகலிங்கம் வைத்திலிங்கம் |
| மா/ 511 | செல்லையா பாலசுப்பிரமணியம் |
| மா/ 515 | சின்னத்தம்பி கந்தையா ஜெகநாதன் |
| மா/ 525 | சின்னத்தம்பி மார்க்கண்டு |
| மா/ 527 | சின்னத்தம்பி கந்தையா மயில்வாகனம் |
| மா/ 529 | செல்லத்துரை நித்தியானந்தன் |
| மா/ 531 | திருமதி பவளம் அண்ணாமலை |
| மா/ 548 | கந்தையா தம்பிப்பிள்ளை |
| மா/ 550 | நாகலிங்கம் தம்பிராசா |
| மா/ 558 | வேலுப்பிள்ளை குமாரசாமி |
| மா/ 563 | சின்னையா கந்தையா |
| மா/ 591 | திருமதி இரத்தினம் சின்னத்துரை |
| மா/ 592 | கந்தையா இராசதுரை |
| மா/ 609 | திருமதி சின்னம்மா வேலன் |
| மா/ 612 | செபஸ்தியாம்பிள்ளை செல்லையா |
| மா/ 621 | திருமதி சிவமணி அரசரட்ணம் |
| மா/ 622 | திருமதி செல்வநாயகம் செல்லப்பா |
| மா/ 639 | திருமதி அற்புதம்மா சந்தியாப்பிள்ளை |
| மா/ 650 | வேலுப்பிள்ளை இராசையா |
| மா/ 660 | பொன்னையா கதிரவேற்பிள்ளை |
| மா/ 663 | வீரசிங்கம் குணரத்தினம் |
| மா/ 664 | அன்னலிங்கம் குமாரசாமி |
| மா/ 673 | தம்பிப்பிள்ளை மார்க்கண்டு |
| மா/ 679 | திருமதி லில்லிப்பூ பிரான்சிஸ்ப்பிள்ளை |
| மா/ 691 | கபிரியர் சுவாம்பிள்ளை |
| மா/ 697 | திருமதி இராசலட்சுமி சிவகுருநாதன் |
| மா/ 699 | சின்னத்தம்பி செல்லையா |
| மா/ 706 | திருமதி கனகலட்சுமி திருநாவுக்கரசு |
| மா/ 721 | சின்னவன் கதிரேசு |
| மா/ 729 | வேலுப்பிள்ளை மண்டலேஸ்வரம் |
| மா/ 731 | சுப்பையா நடனபாதம் |
| மா/ 739 | திருமதி இரத்தினமாலை நடேசு |
| மா/ 784 | கனகரத்தினம் பரராஜசேகரம் |
| மா/ 803 | ஆறுமுகம் செல்லையா |
| மா/ 808 | வேலுப்பிள்ளை தேவரத்தினம் |
| மா/ 809 | உவில்லியம்நல்லதம்பி தேவகடாட்சம் |
| மா/ 819 | இயேசுசகாயம் அருளானந்தம் |
| மா/ 828 | கணபதிப்பிள்ளை ஐயாத்துரை |
| மா/ 836 | முத்தையா கந்தையா |
| மா/ 840 | தில்லைநாயகம் குகதாசன் |
| மா/ 859 | திருமதி. பொன்னம்மா மார்க்கண்டு |
| மா/ 869 | விசயரத்தினம் இராசையா |
| மா/ 870 | திருமதி இராசமணி இராமநாதன் |
| மா/ 888 | சபாபதி செல்லையா |
| மா/ 892 | ஐயாக்குட்டி சுப்பிரமணியம் |
| மா/ 905 | தம்பிராஜா விக்னராஜா |
| மா/ 936 | சின்னையா சபாரத்தினம் |
| மா/ 938 | நடராசா சிவசுப்பிரமணியம் |
| மா/ 941 | அப்புக்குட்டி துரை[illegible] |
| மா/ 946 | சுப்பிரமணியம் பத்மநாதன் |
| மா/ 952 | ஆறுமுகம் கதிரவேலு |
| மா/ 955 | பொன்னுத்துரை கதிரவேலு |
| மா/ 958 | சின்னப்பு நல்லையா |
| மா/ 959 | வயித்திலிங்கம் நல்லையா |
| மா/ 960 | கந்தையா நல்லையா |
| மா/ 967 | திருமதி பராசத்தி சேனாதிராசா |
| மா/ 969 | கார்த்திகேசு சண்முகநாதன் |
| மா/ 976 | விசாகமுத்து வடிவேலு |
| மா/ 977 | சிவசாமி வேல்முருகு |
| மா/ 982 | சிதம்பரநாதன் ஏகநாதன் |
| மா/ 984 | ஆறுப்பிள்ளை அப்பாத்துரை |
| மா/ 985 | பொன்னையா அங்கையா |
| மா/ 990 | கந்தையா பாலசுப்பிரமணியம் |
| மா/ 991 | திருமதி பாக்கியரட்ணம் சின்னப்பு |
| மா/ 992 | செல்லப்பா பாலரத்தினம் |
| மா/ 993 | சின்னத்தம்பி இலட்சுமணர் |
| மா/ 1004 | திருமதி தங்கம்மா ஐயாத்துரை |
| மா/ 1019 | இராசையா கனகசிங்கம் |
| மா/ 1021 | வீரசிங்கம் குமாரசிங்கம் |
| மா/ 1030 | நாகலிங்கம் கனகரத்தினம் |
| மா/ 1039 | திருமதி. மீனாம்பிகை சபாரத்தினம் |
| மா/ 1053 | திருமதி. மீனாட்சி சின்னத்தம்பி |
| மா/ 1054 | பொன்னர் மாணிக்கம் |
| மா/ 1056 | கந்தையா நாகராஜா |
| மா/ 1062 | செல்லத்துரை நித்தியானந்தம் |
| மா/ 1066 | திருமதி நாகேஸ்வரிதேவி நாகலிங்கம் |
| மா/ 1078 | கந்தர் பொன்னு |
| மா/ 1081 | கார்த்திகேசு பொன்னம்பலம் |
| மா/ 1091 | சண்முகம் பாலசுப்பிரமணியம் |
| மா/ 1093 | திருமதி. இராசமணி வரதராஜா |
| மா/ 1096 | ஆறுமுகம் இராமநாதன் |
| மா/ 1102 | தாமோதரம்பிள்ளை இராசா |
| மா/ 1103 | சின்னத்தம்பி இராசலிங்கம் |
| மா/ 1112 | திருமதி. இராசமணி மார்க்கண்டு |
| மா/ 1117 | திருமதி இரத்தினம் வேலாயுதம் |
| மா/ 1142 | இராசையா செல்லத்துரை |
| மா/ 1143 | சின்னப்பொடி சின்னத்தம்பி |
| மா/ 1145 | இராசையா சின்னத்தம்பி |
| மா/ 1146 | பொன்னர் செல்லத்துரை |
| மா/ 1147 | திருமதி. செல்லம்மா வல்லிபுரம் |
| மா/ 1152 | சலமன்கென்றி செல்வராசா |
| மா/ 1160 | சின்னையா சொர்ணவடிவேல் |
| மா/ 1173 | திருமதி சோதிலட்சுமி நடேசன் |
| மா/ 1182 | சுந்தரம்பிள்ளை சிதம்பரநாதன் |
| மா/ 1193 | சின்னப்பு திருநாவுக்கரசு |
| மா/ 1198 | செல்லத்துரை திருஞானம் |
| மா/ 1203 | வயித்தி தம்பு |
| மா/ 1213 | சின்னத்துரை வரதராசா |
| மா/ 1223 | கார்த்திகேசு ஏகாம்பரம் |
| மா/ 1225 | ஜேக்கப் அன்ரனிப்பிள்ளை |
| மா/ 1227 | கார்த்திகேசு அப்புத்துரை |
| மா/ 1231 | கிருஸ்ணர் ஆனந்தகிருஸ்ணன் |
| மா/ 1244 | திருமதி கண்ணம்மா இராமலிங்கம் |
| மா/ 1247 | திருமதி நோமா க[illegible]தையா |
| மா/ 1248 | சின்னையா கந்தையா |
| மா/ 1249 | திருமதி கமலாதேவி தம்பிராசா |
| மா/ 1257 | வேலுப்பிள்ளை கந்தையா |
| மா/ 1261 | சங்கரன் கதிரேசன் |
| மா/ 1275 | கணபதி முருகன் |
| மா/ 1278 | கந்தையா மழவராயர் |
| மா/ 1286 | தாமோதரம்பிள்ளை மகேஸ்வரன் |
| மா/ 1294 | வே.சரவணமுத்து நடராசா |
| மா/ 1304 | பரமசாமி வினோகரன் |
| மா/ 1305 | அமரசிங்கம் பரமானந்தன் |
| மா/ 1317 | வீரகத்தி இராசரத்தினம் |
| மா/ 1318 | வேலுப்பிள்ளை இராசரத்தினம் |
| மா/ 1320 | இராமுப்பிள்ளை இராமநாதன் |
| மா/ 1321 | திருமதி இராசநாயகி மலையாண்டி |
| மா/ 1326 | திருமதி இராஜலட்சுமி இளையதம்பி |
| மா/ 1327 | திருமதி பாக்கியம் சபாபதி |
| மா/ 1329 | செல்லத்துரை இராசசிங்கம் |
| மா/ 1335 | சண்முகரத்தினஐயர் இராமகிருஷ்ணன் |
| மா/ 1338 | கதிரன் சண்முகம் |
| மா/ 1343 | திருமதி சரஸ்வதி பத்மநாதன் |
| மா/ 1356 | நாகமணி செல்லத்துரை |
| மா/ 1360 | காங்கேசு சபாநாதன் |
| மா/ 1375 | கந்தையா செல்லத்தம்பி |
| மா/ 1378 | சின்னத்தம்பி சின்னையா |
| மா/ 1379 | திருமதி மனோன்மணி சிவசுப்பிரமணியம் |
| மா/ 1380 | செல்லத்துரை சிவசுப்பிரமணியம் |
| மா/ 1391 | தம்பிப்பிள்ளை திருநாவுக்கரசு |
| மா/ 1406 | இராசரத்தினம் வெற்றிவேலு |
| மா/ 1410 | சடையர் வீரவாகு |
| மா/ 1411 | சுந்தரம் வன்னியசிங்கம் |
| மா/ 1426 | திருமதி யேற்றூட் அருளானந்தம் |
| மா/ 1427 | செபஸ்ரியாம்பிள்ளை அலெக்சாண்டர் |
| மா/ 1429 | அநானியா அந்தோனிப்பிள்ளை |
| மா/ 1432 | தாமோதரம்பிள்ளை ஆறுமுகம் |
| மா/ 1441 | தில்லையம்பலம் கோபாலசாமி |
| மா/ 1452 | முருகர் கதிரிப்பிள்ளை |
| மா/ 1458 | சங்கரப்பிள்ளை குருகுலசிங்கம் |
| மா/ 1462 | குமாரசிங்கம் கதிரேசநாதன் |
| மா/ 1463 | கனகசபை கந்தையா |
| மா/ 1470 | வைத்திலிங்கம் மயில்வாகனம் |
| மா/ 1473 | திருமதி சிவயோகரத்தினம் நடராசா |
| மா/ 1475 | காசிப்பிள்ளை நாகரத்தினம் |
| மா/ 1476 | ஆறுமுகம் நடராசா |
| மா/ 1480 | கனகநாயகம் பத்மநாயகம் |
| மா/ 1490 | கனகர் பொன்னம்பலம் |
| மா/ 1493 | திருமதி பார்வதி ஆறுப்பிள்ளை |
| மா/ 1498 | கந்தப்பிள்ளை இரத்தினம் |
| மா/ 1499 | கதிரிமணியம் ராமகிருஸ்ணா |
| மா/ 1501 | சீனியர் இராசா |
| மா/ 1512 | திருமதி மேரிதிரேசாபுஸ்பம் இராஜநாயகம் |
| மா/ 1522 | ஆறுப்பிள்ளை சின்னத்தம்பி |
| மா/ 1529 | முருகையா சிவராசரத்தினம் |
| மா/ 1531 | சதாசிவம் ஜெகநாதன் |
| மா/ 1545 | முருகேசு சுப்பிரமணியம் |
| மா/ 1548 | ஞானாதிக்கம் சின்னையா |
| மா/ 1569 | திருமதி அக்னேஸ்லூத் தம்பிநாயகம் |
| மா/ 1577 | திருமதி மேரிதிரேசா அன்ரனிப்பிள்ளை |
| மா/ 1580 | வல்லிபுரம் அப்புத்துரை |
| மா/ 1587 | நீக்கிலப்பிள்ளை அருளானந்தம் |
| மா/ 1589 | திருமதி திரேஸ்புஸ்பம் அந்தோனி |
| மா/ 1595 | அதிரியாம்பிள்ளை இராயப்பு |
| மா/ 1604 | ஆசீர்வாதம் யேசுநாயகம் |
| மா/ 1608 | வயித்தியாம்பிள்ளை கிறிஸ்தோப்பர் |
| மா/ 1615 | அருனாசலம் கனகசபை |
| மா/ 1619 | திருமதி பரமேஸ்வரியம்மாள் கணேசலிங்கம் |
| மா/ 1636 | கனகசபை நடராசா |
| மா/ 1639 | அப்பாப்பிள்ளை நாகலிங்கம் |
| மா/ 1640 | செல்லப்பா நடராசா |
| மா/ 1643 | திருமதி நட்சேத்திரம் பிலிப்புப்பிள்ளை |
| மா/ 1644 | வேலுப்பிள்ளை பரராசசிங்கம் |
| மா/ 1666 | மரியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை |
| மா/ 1669 | சிங்கராசா சிறில் |
| மா/ 1674 | திருமதி கேற்றூட் செபஸ்ரி |
| மா/ 1678 | பிலிப்பு தியோகு |
| மா/ 1680 | திருமதி பரமேஸ்வரி தியாகராசா |
| மா/ 1683 | இராசையா துரைசிங்கம் |
| மா/ 1693 | சுவாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை |
| மா/ 1696 | திருமதி கிறிஸ்றீனம்மா அருளப்பு |
| மா/ 1707 | திருமதி ஞானமணி லோப்பையா |
| மா/ 1736 | தம்பையா நமசிவாயம் |
| மா/ 1743 | பாவிலுப்பிள்ளை பெனடிக்ற் |
| மா/ 1745 | கனகசபை பஞ்சலிங்கம் |
| மா/ 1766 | நாகலிங்கம் துரைராசா |
| மா/ 1771 | அருளப்பு அடைக்கலம் |
| மா/ 1775 | கந்தையா இரத்தினசிங்கம் |
| மா/ 1787 | டேவிற் முடியப்பு |
| மா/ 1806 | குழந்தை சின்னத்துரை |
| மா/ 1814 | திருமதி அழகம்மா மரியதாஸ் |
| மா/ 1817 | அதிரியாம்பிள்ளை இறபியல்பிள்ளை |
| மா/ 1818 | சோமு கணபதிப்பிள்ளை |
| மா/ 1838 | சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன் |
| மா/ 1844 | யோசப்புஅப்பொலி அன்ரனி |
| மா/ 1849 | மனுவேல்பிள்ளை யேசுரத்தினம் |
| மா/ 1852 | செல்லப்பா கனகராசா |
| மா/ 1856 | பண்டாரி கிருஷ்ணன் |
| மா/ 1868 | தம்பு நடேசு |
| மா/ 1869 | செல்லப்பா பொன்னுத்துரை |

(வளரும்)




சுழிபுரம், ஓக.18

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயப் பெருந்திருவிழா கடந்த 11 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

எதிர்வரும் 25ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 26ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

திருவிழா நாள்களில் தினமும் இரவு 7 மணிக்கு ஆசிரியர் இரா.செல்வகணபதி 'மகாபாரதம்' என்னும் தலைப்பில் தொடர்சொற்பொழிவாற்றி வருகிறார். (9-28-203)

* * *

யாழ்ப்பாணம், ஓக.18

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மி விரதபூசைகள் நடைபெறவுள்ளன.

காலை 6.30 மணிக்கு ஸ்ரீ மகாலட்க்ஷ்மி அம்பாளுக்கு நவகலச அபிசேகம், ஆராதனைகள், அர்ச்சனை என்பன நடைபெற்று தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு விசேட தீபாராதனை நிகழ்வு இடம்பெறும்.

இதனையடுத்து அம்பாள் பத்மாசனத்தில் திருவீதியுலா வருவார். திருவிழா நிறைவடைந்ததும் அடியார்களுக்கு நோன்புநூல் வழங்கப்படும். (ஓ-203)

* * *

யாழ்ப்பாணம், ஓக.18

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழா நடைபெறும். (ஓ-202)

* * *

கொழும்புத்துறை, ஓக.18

நீர்வேலி புனித பரலோகமாதா தேவாலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, நவநாள் ஆராதனைகள் நடைபெற்றுவருகின்றன.

எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5.45 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (ஓ-30-203)


## தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புவோரும் தேவை. எமது ஸ்தாபனத்துக்குச் சமீபத்தில் வசிப்பவராயின் நன்று.

*ஆண், பெண் இருபாலாரும் நேரில் தொடர்புகொள்ளவும்.*

**அங்கலின் ரெக்ஸ்ரைல்.** (38996)

**55, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.**

## இதோ வாருங்கள் வந்து பாருங்கள்

**மிதிவெடி செயற்பாட்டு வாரக் கண்காட்சி**

இடம்: சிங்கள மகாவித்தியாலய மைதான முன்றில்
காலம் : 18.08.05 - 20.08.05 வரை
நேரம்: காலை 10 மணி முதல் மாலை 6 மணிவரை

மிதிவெடி செயற்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் ஒருங்கிணைவுடன் மிதிவெடி செயற்பாட்டின் பங்குதாரர் நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் மிதிவெடி செயற்பாடுகள் தொடர்பான கண்காட்சி.

எமது சமூகத்தை மிதிவெடி அபாயத்தில் இருந்து மீட்டெடுக்க அனைவரும் அணி திரண்டு பார்வையிட்டு பயனடைவோம்.

(39006)(26-14-15) **ஏற்பாட்டாளர்கள்.**

சங்குவேலி அருள்மிகு
ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் தேவஸ்தான
## தேர்த்திருவிழா

இன்று (18-08-2005) வியாழக்கிழமை காலை 10 மணிக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேரில் விநாயகர் வீதி உலா வருவார்.

அடியார்கள் அனைவரும் இந்நிகழ்வில் பங்குபற்றி எம்பெருமானின் அருளைப் பெறுவீர்களாக.

(38997)(26-14-15) **- தேர்த்திருப்பணிச்சபை.**

முல்லை. தொழில்நுட்பக் கல்லூரி, முல்லைத்தீவு
## பதவி வெற்றிடம்

எமது கல்லூரியில் 01-09-2005இல் ஆரம்பிக்கப்படவுள்ள பின்வரும் பயிற்சி நெறிகளுக்கான போதனாசிரியர், உதவிப் போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. தொழில் தகைமை:**
குறிப்பிட்ட பதவிகளுக்குரிய பயிற்சிநெறி சம்பந்தமான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் குறைந்தது 6 மாத காலப் பயிற்சியும், வெளிக்களப் பயிற்சியும் நிறைவுசெய்த சான்றிதழ்களுடன், கற்பித்தல் ஆளுமையும் அனுபவமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**02. கல்வித்தகைமை:**
குறைந்தது க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**03. வயது:**
20 - 45 வருடங்கள்

**பயிற்சி நெறிகள்:**
01. மின்னொட்டு (Welding)
02. நீர் குழாய் பொருத்துதல் (Plumbing) } நேர்முகத் தேர்வு 20-08-2005 முற்பகல் 9.30

03. மேசன் தொழில் பயிற்சி (Masonry)
04. மரவேலை தொழில் பயிற்சி (Carpentry) } நேர்முகத் தேர்வு 21-08-2005 முற்பகல் 9.30

சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை நேர்முகத்தேர்விற்கு முன் அல்லது அன்றைபதினம் காலை அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, முல்லைத்தீவு என்ற முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை நேர்முகத்தேர்விற்குக் குறிப்பிட்ட திகதியில் சகல ஆவணங்களின் மூலப் பிரதிகளுடன் நேரில் சமுகமளித்தல் வேண்டும்.

**அழைப்பு அனுப்பப்படமாட்டாது.**

(சி/44525)(24-14-15-26) **க.வைரமுத்து (அதிபர்)**

## படிவங்கள்

* தொழில் நுட்ப அலுவலர் பதவிக்கான விண்ணப்பப்படிவமும்,

* நிதி அமைச்சு நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் பதவிக்கான விண்ணப்பப்படிவமும்

உண்டு

Bharathi Pathippakam.
430, K. K. S. Road, Jaffna.

## WANTED LOCUM DOCTORS

IoFM attached DCCs. at Chavakachcheri and Jaffna are in need of locum doctors to work on a sessional basis.

- Those who want to take up family medicine as a career or interested in doing research will be benefited.
- Those who are willing to work for the Institute of Family Medicine (IoFM) for a period of 2 years full time or partime equivalant of this duration will be encouraged to do Post - Graduate exams (MD Family Medicine, SL or MRCGP, UK) and also granted a year of UK working experience.
- An attractive remuneration will be paid for the service, which is subject to negotiation.

For further details e-mail to *admin@miot.org.uk*

**INSTITUTE OF FAMILY MEDICINE**
**125, Main street Jaffna.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மக்கள் வங்கியின்
உதவிப் பிராந்திய
முகாமையாளராக இருந்து
தனது ஆற்றல், அறிவு,
மனித நேயம்
ஆகியவற்றால் சிறிது
காலத்துக்குள்ளே மக்கள்
வங்கியின் யாழ்.பிராந்திய
முகாமையாளராக
உயர்வுபெற்ற
**மாண்புமிகு**

## துரைசிங்கம் ரகு

அவர்கள் மேன்மேலும் உயர்வுபெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வேலக்கை முருகனை வேண்டுகின்றோம்.

ஈஸ்வரன் இன்ஜினியரிங் வேக்ஸ்
*இந்துக்கல்லூரி முன், மானிப்பாய்.*

(38969)(26-14-15)

## 6ஆம் ஆண்டு பூர்த்திவிழா

BS

*ஆறு ஆண்டுகள் மக்களின் ஆடைத் தேவைகளை*
*செவ்வனே நிறைவுசெய்து*
*7ஆவது அகவகையில் குதூகலத்துடன்*
*காலடி எடுத்துவைக்கிறது*

## மகா சில்க்ஸ்

*என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,*
*ஆதரவாளர்களுக்கு அறியத்தருவதில்*
*பெருமகிழ்ச்சியடைகின்றோம்.*
*★ திருமண முகூர்த்தப் பட்டுப் புடைவைகள் மற்றும்*
*இன்றைய நாகரிகத்திற்கேற்ற பட்டுப் புடைவைகள்,*
*சேட்டிங், சூட்டிங், றெடிமேற் ஆடைகளுக்கு*

## மகா சில்க்ஸ்

32,40A, MODERN MARKET,
JAFFNA.

*32, 40A, நவீன சந்தை,*
*யாழ்ப்பாணம்.*

(சி/44537) (24-14-15)

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

**18*08*2005**

**Happy Birthday**





கேனடி - பத்மலீலா
தம்பதியினரின்
செல்வப் புதல்வர்களான
**சுஜித்தா, சுஜித்தன்**
*ஆகியோர் தமது*
*இரண்டாவது*
*பிறந்த தினத்தை*

**சுஜித்தா** **சுஜித்தன்**

*இன்று (18-08-2005) வியாழக்கிழமை வண்ணார்பண்ணையில் உள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பிரான்ஸில் வசிப்பவர்களான பெரியமாமா, பெரிய அத்தை, சின்னமாமா, சின்ன அத்தை, ஆசை மாமா, ஆசை அத்தை, சித்தப்பா, சித்தி, அண்ணா (பிரணவன்), மச்சாள்மார்களான (வனஜா, சஜானா) மற்றும் குட்டி மாமா அனைவரும் செல்வவிநாயகப் பெருமான் அருள்பெற்றுப் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.*

இல.20, பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(39005)(26-14-15)

தகவல்:
**மாமாமார்.**

விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## 85ஆவது பிறந்தநாள் வாழ்த்து

**19→08→2005**

*Happy Birthday*



19 08 1920

*உடுவில்*
*காளி கோயிலடியைச்*
*சேர்ந்த*
**கணபதிப்பிள்ளை**
**பாக்கியம்**
*அவர்கள் தனது 85ஆவது*
*பிறந்ததினத்தை*
*நாளை (19-08-2005)*
*வெள்ளிக்கிழமை*
*தனது இல்லத்தில்*
*வெகுவிமரிசையாகக்*
*கொண்டாடுகிறார். இவரை*
*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், அனைவரும்*
*பூட்டப்பிள்ளைகள்*
*நீடூழி வாழ்கவென*
*வாழ்த்துகிறார்கள்.*

திருமதி
**கணபதிப்பிள்ளை பாக்கியம்**

**காளி கோயிலடி,**
**உடுவில், சுன்னாகம்.**

(38999)(26-14-15)

**க.வடிவேலு (மகன்).**

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# அவசர காலநிலையை நீடிப்பதன் நோக்கம்....?

கடந்த சனிக்கிழமை - இம்மாதம் பதின்மூன்றாம் திகதியன்று - ஜனாதிபதியால் அவசரகாலநிலை பிறப்பிக்கப்பட்டது. அரசமைப்பின் நியதிப் பிரகாரம், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அவசரகால நிலை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பதினான்கு நாள்களுக்குள் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். அதன் பொருட்டு நாடாளுமன்றத்தின் விசேட கூட்டத்தினை இன்று கூட்டியிருக்கிறார் சந்திரிகா.

அமைச்சர் கதிர்காமரின் கொலையை அடுத்தே அவசர காலநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களைக் கருதியும் கொலை குறித்த விசாரணையை விரைவாக நடத்துவதற்கு வசதிசெய்யும் பொருட்டுமே, அவசரகால நிலை பத்து நாள்களுக்குப் பிறப்பிக்கப்பட்டதாகப் பொதுவாகக் கருதப்பட்டது.

ஆனால், இச்சட்ட விதியை ஒரு மாதகாலத்திற்கு அமுல்செய்யும் உத்தேசம் அரசிற்கு உண்டெனச் சொல்லப்படுகிறது. இப்போதைய நிலையில் பெரும்பான்மைப் பலம் இல்லாத ஓர்அரசினால் தனது விருப்பத்தை ஒப்பேற்ற முடியுமா என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசில் இருந்து பிரிந்துசென்ற ஜனதா விமுக்தி பெரமுன அவசர காலநிலை நீடிப்புக்கு ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜாதிக ஹெல உறுமயவும் அவ்வழியே செல்லும். அவற்றுக்கு மேலதிகமாகப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரிக்கக் கூடும் என்ற தகவல்கள் நேற்றுக் கொழும்பில் கசிந்தன.

பாதுகாப்பு நிலைமை கருதி ஒரு மாதத்திற்கு அவசர கால நிலையை அமுல்செய்வதற்கு மட்டுமே ஐ.தே.கவின் ஆதரவு இருக்கும் என்றும் -

மேற்கொண்டு நீடிக்கும் எந்த முயற்சிகளுக்கும் தாம் ஆதரவளிக்கப்போவதில்லை என்றும் அதே கட்சி வட்டாரங்களில் பேசப்பட்டது.

அமைச்சர் கதிர்காமரின் கொலையால் எழுந்த பாதுகாப்பு நிலைமை கருதியே அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அதனை வேண்டுமானால் ஒருமாத காலத்திற்கு நீடிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது. ஆனால், வேறு அரசியல் நோக்கங்களுக்காக அரசு பயன்படுத்த இடமளிக்க முடியாது - என்பதே ஐ.தே.கட்சி வட்டாரங்களின் கருத்தாக உள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள அவசரகால நிலையை நீடித்து, அதனைப் பயன்படுத்தி ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கு சந்திரிகா முறைகேடாக முயற்சிக்கிறார் என்ற சந்தேகம் கிளம்பி உள்ளது. அரசு அவ்வாறான முயற்சியில் இறங்கினால், எமது கட்சி அதனைத் திட்டவட்டமாக எதிர்க்கும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஏற்கனவே கூறியிருந்தார்.

நாட்டின் நலன், பாதுகாப்புக்கருதி அவசர கால நிலையை நீடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கும். ஆனால், அதனைத் தொடர்ச்சியாக நீடித்து, தேர்தல்களை ஒத்திவைக்க அரசு முயலுமானால் அதனை எமது கட்சி ஒருபோதும் ஆதரிக்காது என்று - அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஒரு மாதகாலத்துக்கு மேலாக அவசரகால நிலையை நீடித்து தேர்தல்களை ஒத்திவைத்தால் ஐ.தே.கட்சி நீதிமன்றம் செல்லும் என்றும் அறியப்படுகிறது.

எப்படியோ -

அவசரகால நிலை நீடிக்கப்பட்டால், ஜனாதிபதித் தேர்தல் விவகாரத்தில் ஜனாதிபதியும் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் அதனைத் தமக்குச் சாதகமாக்கி காரியங்களில் ஈடுபட முனைவர் என்ற கருத்து எல்லாத் தரப்புகளிலும் நிலவுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடத்தப்பட வேண்டும்? இந்த வருடத்திலா அல்லது அடுத்த வருடத்திலா? என்பது பெரும் சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறியுள்ள வேளை இது. இந்த வருடத்திலேயே நடத்த உத்தரவிடக் கோரியும், அடுத்த வருடத்தில் நடத்த உத்தரவிடக் கோரியும் உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கலாகியுள்ளன.

இந்த வருடத்தில் நடத்தப்படவேண்டும் என்ற வழக்குத் தொடர்பில், இவ்விடயத்தில் முழு அதிகாரங்களும் கொண்ட தேர்தல் ஆணையாளர், தமது சாதகமான கருத்தை உயர்நீதிமன்றுக்கு அனுப்பியுள்ளார்.

எவ்வாறாயினும், நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பின்னரே இறுதி முடிவுக்கு வர இயலும். எனினும், தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அவசரகாலநிலை நீடிப்பு, ஜனாதிபதிக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் - உருவாக்கும் - என்பது நிச்சயம்.

தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டால், ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மொத்தத்தில் தெற்கில் பெரும் அரசியல் கொந்தளிப்பு வெடிக்கும் சாத்தியமும் உண்டு. அத்தகைய இருள் படரும் பட்சத்தில், சமாதான முயற்சி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் செயற்பாடு என்பன கேள்விக் குறிகளாகிவிடலாம்.

கதிர்காமர் போன்ற ஒரு பெருந்தலைவரை வன்செயல் மூலம் இழந்த போதிலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பேணிக் காப்பதிலும், சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதிலும் தமக்குள்ள ஈடுபாடு கலையாது என்றவாறு கூறியிருக்கிறார் சந்திரிகா.

ஆனால், அரசியல் அதிகாரம் என்று வரும்போது, அவர் தமது மேற் கூறப்பட்ட கருத்தை மாற்றிக்கொள்ளமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

## எவ்வளவோ எடுத்துக்கூறுகிறோம், ஆனால்

# வெடிபொருள்களைக் கையாள்வதில் மக்கள் தொடர்ந்தும் அசிரத்தை

## மிதிவெடி செயற்பாட்டு மையப் பொறுப்பதிகாரி கவலை

யாழ்ப்பாணம், ஓக.18

எவ்வளவோ எடுத்துக்கூறியும் வெடி பொருள்களைப் பொதுமக்கள் கவலையீனமாகக் கையாண்டு ஆபத்துகளில் சிக்குகிறார்கள்.

- இவ்வாறு கவலை தெரிவித்தார் மிதிவெடி செயற்பாட்டு மையப் பொறுப்பதிகாரி எலமோ ஆனந்தராஜா.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மிதிவெடி அபாயமுள்ள பிரதேசங்கள் இனங்காணப்பட்டு அடையாளப் படுத்தப்படுகின்றன. அதன் பின்னரே மிதிவெடிகள் அகற்றப்படுகின்றன. இதைவிட மோதல் நடைபெற்ற இடங்களில் வெடிக்கத்தக்க பொருள்களை இனங்கண்டு அப்புறப்படுத்துகின்றோம்.

எமது யாழ்.மாவட்டம் மக்கள் செறிவாக வாழும் பிரதேசம். இங்கு வெடி பொருள்களை அப்புறப்படுத்துவதில் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்கின்றோம். அதிகளவான மக்கள் இப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை. இது எமது பணியைத் தாமதப்படுத்துகின்றது.

வெடிபொருள்கள் தொடர்பாகப் போதியளவு மக்களுக்கு எடுத்துக்கூறியுள்ளோம். ஆயினும், தெரிந்து கொண்டே மக்கள் அசிரத்தையாகவே செயற்படுகின்றார்கள்.

அண்மையில்கூட சாவகச்சேரிப் பகுதியில் காணி துப்புரவாக்கிய ஒருவர் வெடி பொருள் வெடித்ததில் உயிரிழந்தார். இவ்வாறாக இந்த வருடம் 13 நிகழ்வுகளில் 17 பேர் காயமடைந்தனர்; இருவர் உயிரிழந்துள்ளனர்.

எனவே, மக்கள் சந்தேகத்திற்கிடமான எந்தப்பொருளைக் கண்டாலும் உடன் எமக்கு அறிவிக்கவேண்டும். பொதுமக்கள் அவர்களாகவே அந்தப் பொருள்களைக் கையாளமுற்படும்போது அது அவர்களுக்கே ஆபத்தாக முடியும் என்று தெரிவித்தார்.

(ஒ-202-204)

# மஹிந்தவின் தேர்தல் பிரசாரத்துக்கு இரு வாரங்களில் 8 கோடி ரூபா செலவு

கொழும்பு, ஓக.18

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து இரண்டு வார காலத்தில் 8 கோடி ரூபா செலவில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இவ்வாறு சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டார். இதனையடுத்து நாடு பூராகவும் அவரை ஆதரித்துப் பிரசாரச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்தப் பிரசுரங்களுக்கு இருவார காலங்களுக்குள் செலவுசெய்யப்பட்டுள்ள தொகை 8 கோடி ரூபா எனத் தெரியவந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலொன்று இடம்பெற முன்னர் அதில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் சுவரொட்டிகளுக்கு இத்தகைய பெருந்தொகையொன்றைச் செலவழித்துள்ளது இலங்கையில் இதுவே முதல் தடவையாகும்.

ஸ்ரீல.சு.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்ட தினத்திலிருந்து அவரது வர்ணப்படம் அச்சிட்ட சுவரொட்டிகள் நாடு பூராவும் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-206)

# மணல் கடத்த இப்படி ஒரு யுக்தி

கைதடி, ஓக.18

நாவற்குழி தெற்கில் சட்டவிரோதமாக மணல் அகழ்வோர் பொலீஸாரிடமிருந்து தப்புவதற்காகப் புதுவழியைக் கையாண்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

நாவற்குழி தெற்குப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளில் வடமராட்சிப் பகுதியில் இருந்து வரும் சிலர் ஈடுபடுகின்றனர் என்று அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு சட்டவிரோதமாக மணல் அகழ்வோர் கனரக வாகனங்களில் மணலை ஏற்றியபின் அதன்மேலே உமி மூடைகளை அடுக்கி நெல்மூடைகளைக் கொண்டுசெல்வதுபோலப் பாவனை செய்து இந்தக் கடத்தலை மேற்கொண்டு வருகின்றனர். இச்சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்த இப்பகுதிக் கிராமசேவையாளரும் பொதுமக்களும் பல முயற்சிகளை மேற்கொண்டபோதும் எதுவித பயனும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - நாவற்குழி இறால் பதனிடும் தொழிற்சாலைக்கு மேற்குப் பக்கமாகவுள்ள காணியில் இச்சட்டவிரோத மணல் அகழ்வால் பாரிய பள்ளங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் -

இன்னும் சில காலங்களில் ஏ-9 வீதியும் இதனால் பாதிப்படைய நேரிடலாம் என்றும் - கவலை தெரிவிக்கப்படுகிறது.

எனவே, சமூக நலனில் அக்கறை கொண்டோர் இவ்விடயத்தில் கவனமெடுத்து, இச்சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்துநிறுத்துமாறு இப்பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-75)

# யாழ் 'றோட்டறக்ட்' கழகத்திற்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஓக.18

யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்துக்கு 6 செயற்றிட்டங்களை மேற்கொள்ள 3 லட்சத்து 26 ஆயிரம் ரூபா நிதி கிடைத்துள்ளது என்று யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியைப் பயன்படுத்தி முதற்கட்டமாக எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தாளையடி, உடுத்துறை, ஆழியவளைப் பகுதி மக்களுக்கு ஆயிரம் லீற்றர் கொள்ளளவுள்ள 10 தண்ணீர்த்தாங்கிகள், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் ஆகியவை வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து சுவிஸில் வசிக்கும் றமேஸ் என்பவர் இந்த நிதியை வழங்கியுள்ளார் என்று திட்ட இயக்குநர் தெரிவித்தார். (ஒ-203)

## உதயவாக்கு

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். இவை அனைத்திற்கும் மேலாக அன்பு வேண்டும்.

-சுவாமி விவேகானந்தர்.

## சந்நிதி ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா

அறந் திகழ் சந்நிதி சென்று
அணித் திகழ் தேரில் சேயோன்
சிறந்திடும் காட்சி கண்டோர்
செகத்தினில் உயர்ந்தோர் ஆவர்!
பிறந்ததன் பயனைக் காண்பார்
பிணியினைக் காணாத் தேரில்
சிறந்ததாம் காட்சி நல்கும்
தெய்வத்தை வணங்குவோமே!

- புலவர் ம.பார்வதிநாதசிவம்.

## நாளை

ஆவணி 03
வெள்ளிக்கிழமை
19.08.2005
திதி: பூரணை
பின்னிரவு 12.41 வரை
நட்சத்திரம்: திருவோணம்
முற்பகல்: 9.12 வரை
பூரணை விரதம்
சுபநேரம்: 06.05 - 07.35
ராகுகாலம்: 10.35 - 12.05
(யாவும் பழைய நேரப்படி)



# உபாகர்மம்
## வரலட்சுமி விரதம்

*இணுவில் காயத்ரீபீடம் ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி ஆலயத்தில் நாளை (19.08.2005) வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் யஜுர் உபாகர்மமும் காலை 9 மணிமுதல் வரலட்சுமி நோன்பும் நடைபெறும்.*

(38985)
(42.16.34)

சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்.



கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்தின்
47ஆவது ஆண்டு விழாவையொட்டி

## 25Km சைக்கிள் ஓட்டம் (பொது)

*காலம்: நாளை (19.08.2005) வெள்ளி (போயாதினமன்று)*
*நேரம்: காலை 7 மணி*
*கலந்துகொள்ள விரும்புபவர்கள் நேரில் தொடர்புகொள்ளவும்.*
*இரவு GREEN NITE இன்னிசை நிகழ்வும் இடம்பெறும்.*
தொடர்புகளுக்கு: கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம்,
*சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.* T.P.: 021 4590292.

(38981)(42.16.34)

விழா அனுசரணை: **TAANIYA'S CANADA QUEEN**


## வரட்சி காரணமாக கால்நடைகள் இறப்பு!

நெடுந்தீவுப் பகுதியில் நிலவும் வரட்சி காரணமாகக் கால்நடைகள் இறப்பு அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இங்கு நிலவும் கடும் வெயில் காரணமாக நீர்நிலைகள் வரண்டுள்ளன. கால்நடைகளுக்கென அமைக்கப்பட்ட கேணிகள் துப்புரவு செய்யப்படாமல் நீண்டகாலமாகக் கவனிப்பாரின்றி கிடக்கின்றன என்றும் -

கால்நடைச் சங்கங்கள் கூட இவற்றின் நலன்களில் அக்கறை கொள்வதில்லை எனவும் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (9-111)

# மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு - கிழக்கு மாகாணசபை

### வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் II (நீகோட்II)
### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
### " ஆ.அ.வ" கடன் இல. 2168-SRI(SF)

## யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல:01

1. வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின்(NECORD -II) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டிட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விகோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/NECORD-II/HS/01 | ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவமாது விடுதி அமைத்தல். | M7 | 21,000/= |
| 02 | JF/NECORD-II/ED/01 | கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் 130'x 25' அளவுடைய இருமாடிக் கட்டடம் புனரமைத்தல். | M6 | 84,500/= |
| 03 | JF/NECORD-II/ED/02 | கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 110'x 25' அளவுடைய இருமாடிக் கட்டடம் புனரமைத்தல். | M6 | 70,500/= |
| 04 | JF/NECORD-II/ED/03 | மிருசுவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 110'x 25' அளவுடைய இருமாடிக் கட்டடம் புனரமைத்தல். | M6 | 71,000/= |
| 05 | JF/NECORD-II/ED/04 | சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் 70'x25' அளவுடைய மூன்றுமாடி வகுப்பறைக் கட்டடம் புனரமைத்தல். | M6 | 64,000/= |
| 06 | JF/NECORD-II/ED/05 | கோண்டாவில் இராமகிருஷ்ணமிசன் வித்தியாலயத்தில் 110'x 25' அளவுடைய இருமாடிக் கட்டடம் புனரமைத்தல். | M6 | 61,000/= |
| 07 | JF/NECORD-II/ED/06 | சென். ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயத்தில் 110'x 25' அளவுடைய மூன்றுமாடி வகுப்பறைக் கட்டடம் பூரணப்படுத்தல். | M7 | 35,000/= |
| 08 | JF/NECORD-II/ID/01 | பருத்தித்துறையில் வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்று எந்திரிகள் அலுவலகக் கட்டடம் புனரமைத்தல். | M7 | 41,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   **i)** நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   **ii)** இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்ராட்"டுடன் M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.
   **iii)** கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.
   **iv)** "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   **v)** மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   **vi)** ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை *மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD கச்சேரி, யாழ்ப்பாணத்தில்* பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 021-2223625, தொலைநகல்: 021-2225163, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk
6. ஒப்பந்த ஆவணங்கள் ஆவணி மாதம் 18ஆம் திகதி முதல் புரட்டாதி மாதம் 2ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.
8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் *"தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்"* இற்கு புரட்டாதி மாதம் 9ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்பாகக் கிடைக்கவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் புரட்டாதி மாதம் 7 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**ஆ.சிவசுவாமி,**
*பதில் தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,*
*மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.*

(சி.44522)(42.16.34)


# வான், கார் வாடகைக்கு
## குளிரூட்டியது



- திருமண வைபவங்கள்
- விசேட வைபவங்கள்
- முழு இலங்கை சுற்றுலாக்கள்
- உள்ளூர் சுற்றுலாக்கள்

*அனைத்துச் சேவைகளுக்கும் அதிநவீன வசதிகளுடன்*

யாழ்நகரில்.
நல்லூர்
ஒளியருவி வீடியோ.
B440 பருத்தித்துறை வீதி.
நல்லூர்.யாழ்ப்பாணம்.
021-2222604

தொடர்பு:சந்திரன்
0777-739673

வடமராட்சியில்
ஸ்ரீ வல்லிபுராபோட்டோ.
குருவிச்சானெல்லை,
புலோலி தெற்கு.புலோலி.
021-2263459

(38962)(16-34)


# 6ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்

*மண் மகிழ*
**13 – 06 – 1981**



*கண் நெகிழ*
**25 – 08 – 1999**

## செல்வி திருமகள் கனகசபை

திதி: பூர்வபக்க சதுர்த்தசி

*எம் குடும்பத்துக்கொரு குல விளக்காய் உதித்தவளே!*
*ஆண்டுகள் ஆறென்ன ஆறாயிரம் சென்றாலும்*
*நீ விட்டுச் சென்ற உன் குறும்புகள்*
*என்றும் எம் நெஞ்சை உருக்குமம்மா!*
*சந்நிதியான் தேரடி பணிய சென்ற உன்னை*
*அவன் தன்அடியிலேயே இருத்திவிட்டான்!*
*இது எமக்கு மகிழ்வா துக்கமா தெரியவில்லையம்மா!*
*ஆனால் அவனுடன் இருக்கிறாய் என்ற திருப்தி மட்டும்*
*உண்டம்மா!*

*உன்பிரிவால் துயருறும்:*
**குடும்பத்தினர்.**

மீசாலை வடக்கு,
மீசாலை.
(38986)(42-16-34)

ACTION CONTRE LA FAIM

## FOOD SECURITY SURVEILLANCE ADVANCED FIELD OFFICER (Jaffna)

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in Sri Lanka, since 1997. Current activities are based in Ampara, Batticaloa, Jaffna and Tricomalee districts. **We require services of a Food Security Surveillance Advanced Field Officer for JAFFNA.**

This position is suitable for a sociologist, economist or an agriculturist who has experience in Food Security program, survey conducting and analysis skills.

The Food Security Advanced Field officer will manage the Surveillance Team in Jaffna, under the supervision of the Surveillance Manager. He/she will have to manage the collection and analysis of food security data. He/she will contribute to Food Security Surveillance strategy development and reporting under the responsibilities of the Food Security Surveillance Programme Manager in Sri Lanka. He/she will have to attend technical meetings on Food Security in Jaffna.

Applicants must be fluent in English and have a good knowledge in Tamil and in Singhalese, Good computer literacy, especially MS Word and Excel is required.

**Duration:** 6 months

Apply within 10 days or as soon as possible:
ACF Food Security Surveillance Job Vacancy.


**40, RAKKA LANE,**
**CHUNDIKULI,**
**JAFFNA.**

(38978)(42)

e-mail:acf fs@yahoo.com/acfjaffn@sri.lanka.net









வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையினர் நடத்திய மாபெரும் கலை இலக்கியப் பெருவிழாவின் பண்பாட்டுப் பேரணி கடந்த 11ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெற்றது. விருந்தினர்கள் மேள வாத்தியங்களுடன் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், பண்பாட்டுப் பேரணியில் கோலாட்டம், செம்பு நடனம் ஆகிய நிகழ்வுகளை இரண்டாவது படத்திலும், சங்கானை கலாசார மண்டப திறந்த வெளியரங்கில் முதலாம் நாள் நிகழ்வுகளை யாழ். மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும் உலக வங்கியின் வீடமைப்புத் திட்ட திட்டப்பணிப்பாளருமான செ.பத்மநாதன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். கீழே நான்காவதாக உள்ள படத்தில் அலங்கரிக்கப்பட்ட சகடையில் தமிழ்த்தாய் ஊர்வலம் வருவதைக் காணலாம். *(வலி.மேற்குச் செய்தியாளர்).*

### பாதிக்கப்பட்டோருக்கான வீடமைப்புக்கு

# இரண்டாம் கட்டக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை

காரைதீவு,ஓக.18

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கப்படும் வீடமைப்பு நன்கொடையின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

முதலாம் கட்டக் கொடுப்பனவாக வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபாவைக் கொண்டு புதிய வீடொன்றைக் கட்ட ஆரம்பித்தவர்களுக்கு மாத்திரமே 2ஆம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படுமென்று இது தொடர்பான சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டப் பணிப்பாளர் சி.பத்மநாதன் இது தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கு 15 பக்க சுற்றறிக்கை படிவங்களுடன் அனுப்பிவைத்துள்ளார்.

வீட்டுரிமையாளர் தான் முதல்கட்ட கட்டுமாண வேலையைப் பூர்த்திசெய்துள்ளேன் என்று வெளிப்படுத்துகைப் படிவம் மூலம் பிரதேச செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். அதற்குரிய தொழில்நுட்ப அலுவலர் மற்றும் பொறியியலாளர் கட்டுமாண வேலைகளை நேரடியாகச் சென்று பார்த்து திருப்தியென ஒப்பமிட்ட பிற்பாடு 2 ஆம் கட்டக் கொடுப்பனவிற்காக பிரதேச செயலர் பட்டியலை வங்கிக்கு அனுப்பிவைப்பார். அதன் பின்பே 2 ஆம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படும்.

முழுமையாக சேதமடைந்த வீடொன்றை மீளக்கட்ட இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீடமைப்பு நன்கொடையாக அரசினால் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடலோரப் பாதுகாப்பு வலயத்திற்கு (**Bufferzone**) வெளியே உள்ள இவ்வீடுகளை மீளமைக்க 4 கட்டங்களாக ரூபா 50 ஆயிரம், ரூபா 70 ஆயிரம், ரூபா 80 ஆயிரம் என்றவாறு நன்கொடை வழங்கப்படவுள்ளது.

வீடொன்றை மீள அமைக்கும்போது தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் ஒரு வீட்டுக்கு 20 தடவைகள் நேரடியாகச் சென்று பார்வையிடவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முதல் கட்டக் கொடுப்பனவில் அத்திவாரமிட்டு ஒரு பாதுகாப்பு அறையைத்தானும் அமைத்துக் காட்டவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இதனைப் பயனாளி வெளிப்படுத்தவேண்டும். இல்லையெனில் 2 ஆம் கட்டம் இல்லை. இப்புதிய வீடு அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவினுள் மாத்திரமே அமைக்கப்படவேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, பகுதி சேதமடைந்த வீட்டுரிமையாளருக்கு ஒரு லட்சம் ரூபா நன்கொடை இரு கட்டங்களாக வழங்கப்படுகிறது. முதற் கட்டத்தில் பெற்ற 50 ஆயிரம் ரூபாவிற்கான திருத்தவேலைகளைப் பூர்த்தி செய்துகாட்டினால் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படும். (9-84)

# போக்குவரத்து வசதிகளின்றி தீவுப்பகுதி ஆசிரியர் சிரமம்!

யாழ்ப்பாணம்,ஓக.18

தீவுப்பகுதிப் பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள் ஒழுங்கான போக்குவரத்து வசதிகள் இன்றிப் பெரும் கஷ்டப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.மகாலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வேண்டுகோளை விடுத்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டிலிருந்து தீவுப்பகுதிப் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் போக்குவரத்துக்களில் பெரும் கஷ்ரங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

சில பாடசாலைகள் உள்ள பகுதிகளுக்கு வாகனப் போக்குவரத்துகள் இடம்பெறுவதில்லை.

இவ்வாறான நிலையினை மாற்றி, அவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும். (த-7)

## பிரதேச செயலருக்கு பாராட்டிக் கௌரவம்

வலி.மேற்கு,ஓக.18

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் வலி.மேற்குப் பிரதேச மக்களுக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி சங்கானைப் பிரதேச மக்களினால் ''செயற்பணிச் செம்மல்'' என்னும் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அண்மையில் வலி.மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவையினர் நடத்திய கலை இலக்கியப் பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வின் போதே இந்தப் பாராட்டு நிகழ்வு இடம்பெற்றது.

(த-175)

# வாசகர் திருமுகம்

## வேம்படிச் சந்தியிலுள்ள பாரிய குழி

யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தியிலுள்ள பாரிய குழியொன்று ஆஸ்பத்திரி வீதியும் பலாலி வீதியும் சந்திக்கும் வளைவில் உள்ளதால் பலாலி வீதியால் வரும் வாகனங்கள் ஆஸ்பத்திரி வீதிக்குள் நுழையும் போது இக்குழியில் வீழ்வதற்குப் பெரும் வாய்ப்பாகவுள்ளது. மேலும் கடந்த மாதம் பொலீஸாரின் வாகனம் ஒன்று இக்குழியில் வீழ்ந்தமை குறிப்பிடத்தக்கது எனினும் இன்று வரை இக்குழி புனரமைக்கப்படவில்லை.

இக்குழிக்குக் கீழாக கழிவுநீர் செல்வது குறிப்பிடத்தக்கது. இக்குழியை சுற்றி தற்போது கற்களும் பரல்களும் தற்பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டுள்ளன. இரவில் பிரயாணம் செய்யும் வாகனங்கள் இதனால் விபத்துக்குள்ளாக நேரிடுகிறது.

அதிகரித்துவரும் வாகன நெரிசலினால் இப்பாதையிலுள்ள குழியைப் புனரமைக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. அது மட்டுமல்ல கழிவுநீரினால் பெரும் துர்நாற்றம் வீசுகிறது. இதனருகில் யாழ்.போதனா வைத்தியசாலை இருப்பது குறிப்பிடத்தக்கது. இதனால், வைத்தியசாலையிலுள்ள நோயாளர்களுக்கு தொற்றுநோய் ஏற்படும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது.

இக்குழியை புனரமைப்பது மட்டுமல்ல கழிவுநீரால் ஏற்படும் துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்த யாழ்.மாநகரசபை நடவடிக்கை எடுக்குமா?

கல்வியங்காடு, **தி.சாரங்கன்.**

## சமூக முரண்பாடுகளுக்குத் தீர்வு உயிர்க் கொலையா!

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவகாலத்தில் கீரிமலை - பருத்தித்துறை வீதியும் அச்சுவேலி வீதியும் சந்திக்கும் சந்தியில் நிறுவப்படும் ஓர் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்தின் உரிமை தொடர்பான முரண்பாடு இன்று ஒரு கொலையில் முடிந்துள்ளது. இப்பிரச்சினை சட்டபூர்வமான முரண்பாட்டுத்தீர்வு முறைகளின் மூலம் தீர்க்கப்பட முடியாதா? சம்பந்தப்பட்ட இருதரப்புப் பெரியவர்களும் இதுதொடர்பாக சிந்தித்து அநியாயக் கொலைகளைத் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக முரண்படும் தம்பாலை, இடைக்காடு கிராம மக்கள் பலநெடுங்காலமாக அந்நியோன்ய உறவுடன் வாழ்ந்து வரும் நிலையில் இன்று ஏன் இந்த நிலை? இதற்கு இன்றைய இளைய சமூகத்தின் தவறான போக்குத்தான் காரணமாகும். வெளிநாட்டுப் பணமும் கொண்டாட்டங்களுமே இப்படியான கொடூர வழிமுறைகளில் இளைஞரை நாட்டம் கொள்ளவைக்கின்றன. இதனை இரண்டு கிராமங்களிலும் உள்ள கற்றறிந்த முதியோர்கள் தலையிட்டு உடனடியாக நிறுத்த முன்வரவேண்டும்.

நாட்டிலுள்ள இனமுரண்பாட்டு மோதல் நிலைமைகளில் இப்படியான சிறுசிறு சச்சரவுகளைத் தவிர்த்து சமூக ஒற்றுமை பேணப்படவேண்டியது அவசியமாகும். சிங்களப் பேரினவாதிகள் தமிழர் மீது திணிக்கும் அடக்குமுறை, அடாவடித்தனங்களை தட்டிக் கேட்கும் யோக்கிதை இப்படியான தமிழ் இன உள்முரண்பாடுகளினால் தமிழர்க்கு இல்லாது போகும் நிலையே உருவாகலாம். பெரும்பான்மையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் ஏற்பட்ட பண, ஆட்சி அதிகாரங்களும் இனஒடுக்குமுறைக்கு பயன்படுவது போல, உட்சமூக ஒடுககுமுறைக்கும் பயன்படும் என்பது நியாயம் என கூறினால் அடக்குமுறையும், ஒருவரை ஒருவர் தாழ்த்துவதும்தான் மனித உணர்வுகளா? இன சமத்துவம் வேண்டிப் போராடும் தமிழ் இனம் தன்னுள் சமூக சமத்துவத்தைப்பேண முன்வரவேண்டும். இவ்விடயம் தொடர்பாக எமது பிரதேசங்களில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பில் உள்ள சகல தரப்பினரும் தலையிட்டு இரண்டு சமூக பெரியார்களையும் ஓர் சமரசத்திற்கு கொண்டுவர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அச்சுவேலி. **ஒரு மனிதாபிமானி.**

## பொடியள் - அன்றும் இன்றும்!

சில சொற்களுக்கான பொருள்கள் அச்சொற்கள் குறிப்பிடும் நபர்களது சுபாவங்களுக்கு ஏற்ப வேறுபடுகின்றன. உதாரணமாக 'அம்மா' என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். இதன் அடிப்படைப்பொருளானது அன்பும் பாசமும் கொண்ட தாய்மை என்பதாகும். பிச்சைக்காரன் இச்சொல்லை உச்சரிக்கும் போது இரக்கமும் பரிவும் கொண்ட ஒரு குடும்பப்பெண் என்பது பொருளாகிறது. வேலைக்காரன் உச்சரிக்கும் போது அதிகாரம் மிக்க ஒரு வீட்டு எஜமானி என்பது பொருளாகிறது. பக்தன் ஒருவன் இச்சொல்லை உச்சரிக்கும் போது அது சர்வவல்லமை பொருந்திய அன்னை மகாசக்தியைக் குறிக்கிறது. அடக்கியொடுக்கப்பட்ட ஒரு மக்கள் இனம் இச்சொல்லை உச்சரிக்கும் போது அது அதிகாரவெறிபிடித்த ஒரு நாட்டுத் தலைவியை கொச்சையாகக் குறிப்பிடுகிறது. இவ்வாறு சொற்கள் அவை சுட்டும் நபர்களின் தன்மையைக்கொண்டே பல பரிமாணங்களில் பொருள்கொள்கின்றன.

இந்த வகையில் 'பொடியள்' என்ற சொல்லை நாம் எடுத்துக்கொண்டால் தற்கால நிலையில் சந்திக்குச் சந்தி மோட்டார் சைக்கிள்களுடனும் கைத்தொலைபேசி, சி.டி. போன்றவற்றோடு நின்று கூச்சல் கும்மாளமடித்து இளம்பெண்களைப் பரிகாசம் செய்யும் இளைஞர் கூட்டத்தையே அச்சொல் குறிக்கிறது. ஆனால், சற்று சிலவருடங்களுக்கு முன்பு சாரங்கட்டிய கட்டுத்துவக்கு ஏந்திய வீரதீரமிக்க ஒரு இளைஞர் கூட்டத்தையே அது குறித்தது. பொடியள் என்ற நிலையில் நின்று அவர்கள் செய்த சாதனைகள் இன்று அவர்களை சீருடையணிந்த 'போராளிகளாக' தரமுயர்த்தியுள்ளது. சர்வதேசமும் வியந்து நிற்கிறது. ஆனால், இன்றைய 'பொடியள்' சந்தியில் செய்யும் சாதனைகள் அவர்களை எவ்வாறு தரமுயர்த்தப் போகிறது! இவர்கள் சர்வதேசத்துக்கு என்னத்தைச் சாதித்துக் காட்டப்போகிறார்கள்! இக்கேள்விகளுக்கு என்ன பதில? எவருக்குமே தெரியாது. எனவே, 'பொடியள்' என்ற சொல்லின் அன்றைய அர்த்தத்தை மீண்டும் புதுப்பித்து புதுமெருகு ஏற்றி அந்தநிலையில் நின்று சாதனைகள் படைப் பவர்களாக இன்றைய இளைஞர்கள் செயற்பட முயலவேண்டும். அதுவே காலத்தின் தேவை. தயவுசெய்து இது பிரசாரமல்ல. உங்களால் சாதனைகள் படைக்க முடியா விட்டால் சாதாரண மனிதப்பண்புகள் கொண்ட இளைஞர்களாக வாழவாவது முயற்சி செய்யுங்கள். இதுவே பலரதும் பேரவா.

**யாழ்.வதிரீவாசன்.**

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் முன்னாள் பணியாளரும்,
சிக்கன சேமிப்பு சங்கத்தின் அங்கத்தவருமாகிய

**கனகசபாபதி குமாரசாமி**

அவர்கள் எம்மை விட்டுப்பிரிந்து விண்ணுலகம் சென்ற மையையிட்டுத் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்க
பணியாளர் சிக்.சே.கடனுதவுக் கூட்.சங்கம்

(38977)
(42-14-15)



# பதவிவெற்றிடம்

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் நிர்மாணத்துறை நிறுவனத்தால் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தொழில் நுட்ப உத்தியோகத்தர்
   தொழில் நுட்பக் கல்லூரிச் சான்றிதழ் உள்ளவர்கள்
2. மேற்பார்வையாளர்
   கட்டட நிர்மாணத்துறையில் பயிற்சி பெறவிரும்புபவர்கள்.

தகைமையுடையோர் சுயவிவரக் கோவையுடன் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு 7 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

**இயக்குநர்**
எஸ்.என்.ரி.பில்டேர்ஸ்,
செட்டியார் வளவு, சுன்னாகம்.

(38965)(42-14-15)







## ஒக்ரோபருக்குள் வீடமைப்புப் பணிகள் பூர்த்தியாகும்

யாழ்ப்பாணம்,ஓக.18

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வீடமைப்புப் பணிகள் யாவும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திற்குள் பூர்த்தியாகும் என்று புனர்நிர்மாணத் திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்தார்.

தற்போது இந்த வீடமைப்புப்பணிகளுக்காக 2 ஆம் கட்டக் கொடுப்பனவான 60 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

வீடமைப்புப் பணிகள் யாவும் சுமுகமாகவும் திருப்திகரமாகவும் எதிர்பார்த்ததைவிட வேகமாகவும் நடைபெற்று வருகின்றன. பயனாளிகளும் பூரண ஒத்துழைப்பை வழங்கிச் செயற்படுகின்றார்கள்.

எனவே, விரைவில் இந்த வீடமைப்புப் பணிகள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-202-204)

## 'கிறீன் பீல்ட்' ஆண்டுவிழா

குருநகர்,ஓக.18

யாழ். கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்தின் 47 ஆவது ஆண்டு விழா நாளை வெள்ளிக்கிழமை நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அனைவரும் கலந்துகொள்ளும் சைக்கிளோட்டம், விநோதஉடைப் போட்டி ஆகியவையும் சிறுவர், ஆண்கள், பெண்கள் மற்றும் முதியோர்களுக்கான நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

அன்று இரவு 7.30 மணிக்குக் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-51)

## மட்டக்களப்பில் பொலீஸார் காயம்!

மட்டக்களப்பு இருதயபுரம் சந்தியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் பொலீஸார் இருவர் காயமடைந்துள்ளார்கள்.

ஜெயந்திபுரம் காவல் நிலையத்திற்கு முன்னுள்ள காப்பரணில் வீதிக்கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, துப்பாக்கிதாரி ஒருவர் மறைந்திருந்து இவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார். காயமடைந்த இருவரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)

## பொதுக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.18

சாவகச்சேரி சந்தணமுதலிச்சிபுலம் ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-202)

* * *

யாழ்ப்பாணம், ஓக.18

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழாவின்போது சங்கத்தால் முன்னெடுக்கப்படவுள்ள பணிகள் தொடர்பாக இக்கூட்டத்தில் கலந்துரையாடப்படவிருக்கின்றது. (ஒ-202)

## தேசிய கலைவிழாப் போட்டியாளருக்கு!

கலாசாரத் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் தேசிய கலை, இலக்கிய விழாவை முன்னிட்டு பல்வேறு இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், மாவட்ட ரீதியான போட்டிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. இதில் நடனப்போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதியும் நாட்டார்பாடல் போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளன. மேடை நிகழ்ச்சிகளாக நடைபெறவுள்ள இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ள போட்டியாளர்களை போட்டிக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறும் -

நேரம், இடம் என்னும் விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார். (ஒ-202-204)


**வாகனம் வாடகைக்கு அமர்த்தல்**

எமது நிறுவனத்தின் செயற்பாடுகளிற்கு ஒரு மினி பஸ்சும் (Rosa / Journey ரகம்), ஒரு Hiace வாஹும் வாடகைக்கு தேவைப்படுகின்றது. தகுந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பமுடிவு திகதி 22.08.2005

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி*
செயல்திறன் அரங்க இயக்கம்,
அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

# இலங்கை சிந்மயா மிஷன் நடத்திய போட்டிகளில் பரிசில் பெற்ற பாடசாலைகள்

இலங்கை சிந்மயா மிஷன் நிறுவனத்தால் அகில இலங்கை மட்டத்தில் நடத்தப்பட்ட கலை, கலாசாரப் போட்டிகளின்போது தெல்லிப்பழை யூனியன் கல்லூரியினரின் நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதேபோன்று மேற்படி போட்டிகளின்போது வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கை சிந்மயா மிஷன் நிறுவனத்தால் நடத்தப்பட்ட கலை, கலாசாரப் போட்டிகள் நாவலப்பிட்டி ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றன.

கலை, கலாசாரப் போட்டிகளில் நாடகத்தில் முதலாம் இடம்பெற்ற யூனியன் கல்லூரியைச் சேர்ந்த நாடக ஆசிரியர் ந.தவசோதிநாதன் சிறந்த நாடக நெறியாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

முதலாம் இடத்தைப் பெற்ற வில்லுப்பாட்டு நிகழ்வை நிகழ்த்திய வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவன் ம.சுதர்சன் சிறந்த வில்லுப்பாட்டாளராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

கலை, கலாசாரப் போட்டிகளில் முதலாம் இடம்பெற்றவர்களுக்குத் தலா 75 ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படவுள்ளது.

மேலும், சிந்மயா மிஷன் நிறுவனத்தால் நடத்தப்படும் வினாடி-வினாப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் பங்குபற்றுவதற்குத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியினரும், யாழ்ப்பாணம் செங்குந்த இந்துக் கல்லூரி அணியினரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஓ-152)

# மருதடி அறநெறிப் பாடசாலை நடத்தும் வினாவிடைப் போட்டி

வலி.தெற்கு,ஓக.18

சங்குவேலி கலட்டி சித்த ஞான வைரவர் ஆலய மகாகும்பாபிஷேகத்தையொட்டி ஆன்மீக வினாவிடைப் போட்டிகளை நடத்த மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தினர் முன்வந்துள்ளனர்.

வினாவிடைப் போட்டிக்கான வினாப்பத்திரங்கள் மானிப்பாய் மெமோறியல் நவோதயக் கல்லூரியில் வைத்து அறநெறிப் பாடசாலை அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசனால் வழங்கப்பட்டன.

இளைஞர்கள் மத்தியில் சமய விழிப்புணர்ச்சி ஏற்படவும் ஆன்மீக சிந்தனைகள் வளரவும் சமயப் பற்றை ஏற்படுத்தவுமென அறநெறிப் பாடசாலையினர் இப்போட்டியினை நடத்தவுள்ளனர்.

வினாத்தாள்கள் வழங்கும் வைபவத்தில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ பரமேஸ்வர ஜெயக்குமாரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் போட்டிக்குரிய வினாப் பத்திங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அறநெறிப் பாடசாலை ஆசிரியை செல்வி சீ.சிவசுகந்தினி அங்கு உரையாற்றுகையில் வினாவிடைப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் எனக் கூறினார்.

மேற்படி ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கும் 7.20 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது. (ஓ-152)

# தேசிய கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.18

கலாசார மற்றும் மரபுரிமைகள் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டச் செயலகம் நடத்திய மாவட்டமட்டத்திலான தேசிய கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றில் வெற்றிபெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**கட்டுரை**

சிரேஷ்ட பிரிவு - இ.கௌரீசன் (கரவெட்டி), எ.ஜீவகாந்தன் (யாழ்ப்பாணம்), நிஷாந்தா நித்தியானந்தன் (நல்லூர்), தேவகௌரி லிங்கராசா (ஊர்காவற்றுறை), திலக்ஜி கருணைநாதன் (கோப்பாய்).

**கனிஷ்ட பிரிவு**

ச.பிரதாபன் (நல்லூர்), யோ.கஜேந்தினி (சாவகச்சேரி), இ.ராஜேஸ்வரி (காரைநகர்), மதிவதனன் வதனி (கோப்பாய்), சோபிகா செல்வச்சந்திரன் (சங்கானை).

**கவிதை**

தமிழ்மூலம் - பா.வேதநாதன் (பருத்தித்துறை), வைரமுத்து சின்னப்பா (சாவகச்சேரி), ச.சேவியர் வில்பிரட் (யாழ்ப்பாணம்), உதயகௌரி துரைசாமிஐயர் (சங்கானை), மாதுமை சிவாஜி (உடுவில்).

ஆங்கில மூலம் - இராசையா பஞ்சலிங்கம் (பருத்தித்துறை), வைரமுத்து சின்னப்பா (சாவகச்சேரி).

**சிறுகதை**

மாலாதேவி மதிவதனா (தெல்லிப்பழை), சி.லகிதா (உடுவில்), சுபாங்கினி கந்தையா (கோப்பாய்), உதயகௌரி துரைசாமி ஐயர் (சங்கானை), தம்பிராசா பரமலிங்கம் (நல்லூர்).

**குறுநாடகம்**

சின்னத்தம்பி ஜெயநந்தன் (நல்லூர்), யோகராணி மகேந்திரன் (சண்டிலிப்பாய்), பா.வேதநாதன் (பருத்தித்துறை), வீ.இமாஜினி (உடுவில்), ஆனந்தராணி (கரவெட்டி).

**சித்திரம்**

சிரேஷ்ட பிரிவு - அ.காண்டீபன் (உடுவில்), வி.ஜெயச்சந்திரன் (யாழ்ப்பாணம்), செ.சதீஸ்குமார் (சங்கானை), இ.தயாளினி (ஊர்காவற்றுறை), ந.பிரதாஸ் (கோப்பாய்).

கனிஷ்ட பிரிவு - நா.ஐஸ்வர்யா (நல்லூர்), அ.ஜோன் ஜிப்ரிக்கோ (சண்டிலிப்பாய்), சி.யோ.சிவேந்தன் (உடுவில்), கே.நிருஜன் (சங்கானை), க.கஜன் (மருதங்கேணி).

திறந்த போட்டி - ம.கணேசானந்தன் (சங்கானை), ர.பிரகாஸ் (கோப்பாய்), க.சந்திரகுமார் (தெல்லிப்பழை), திருமதி கி.நித்தியாஞ்சலி (கரவெட்டி), ச.சாரூபா (நல்லூர்). (ஓ-204-202)



## சாயி சிந்தனை

### ஆத்மாவின் ஆனந்தம் அன்பு

*அன்பை விடப் புனிதமானது வேறெதையும் இந்த உலகில் உங்களால் காண இயலாது. இன்று உலகியலான பௌதிகமான அன்பினை எல்லா இடத்திலும் காண்கிறீர்கள். ஆனால், ஆத்மாவின் ஆனந்தத்தால் நிறைந்த அன்பைக் காணுதல் என்பது இயலாத காரியம்.*

*பௌதிக அளவில் இரண்டு பேர்களுக்கிடையே இருப்பது தான் அன்பு என நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், உண்மையான அன்பு என்பது இரண்டு இதயங்களுக்கிடையே உருவாவது, நிலைத்து நிற்பது. தெய்வீக அன்பு இவ்வுலகம் முழுவதும் ஊடுருவி நிற்கிறது. நீங்கள் எங்கு பார்த்தாலும் அது அங்கே இருக்கிறது. தெய்வீக அன்பைத் தவிர, இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை. மற்ற அன்பெல்லாம் வந்து போகிற அன்பு தான். நிரந்தரமானவையல்ல. உண்மையான அன்பு, மனிதனின் இதயத்தின் ஆழத்திலிருந்து கிளம்புகிறது. அத்தகைய அன்பை வளர்த்துக் கொண்டு அதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டீர்களானால் அது மிகவும் மன மகிழ்ச்சியைக் கொடுக்கும்.*

*(ஆதாரம் : சனாதன சாரதி)*

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

குருமுதல்வர் அருட்திரு. எஸ்.பி.நேசகுமார் அடிகளாரின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக டாக்டர் தேவநேசன் நேசையா தம்பதி கலந்துகொள்வர். (ஓ-202)

# தெய்வீக இசையரங்கில்

யாழ்ப்பாணம்,ஓக.18

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் ஒன்பதாம் நாளான இன்று வியாழக்கிழமை சாரதா பரஞ்சோதியின் பாட்டு இடம்பெறும்.


அணிசெய் கலைஞர்களான வயலின் - எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் - எம்.சிதம்பரநாதன், கெஞ்சிரா - வி.ரமணன். (ஓ-203)




வேல் வேல் வெற்றிவேல்! ஞானவேல்!!
வீரவேல்! வருக! வருகவே!
விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:
அழகிய சாறி வகைகளுக்கு அமைவான இடம்:
கிறீன் பலஸ் எம்போறியம்
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.
(C/44095)


# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

ஒன்பதாம் நாள் உற்சவம்



## நல்லூரான் திருவடி - 3



*தேவர் சிறைமீட்ட*
*செல்வன் திருவடிகள்*
*காவல் எனக்காமெடி - கிளியே!*
*கவலையெல்லாம் போகுமெடி.*
*- யோகர் சுவாமிகள்.*

## நல்லை முருகா அருள்தாராய்

*இராகம்: கீர்வாணி* *தாளம்: ஆதி*

*பல்லவி*

முருகா எனும் போது வருவாய் - நீ
வேண்டும் வரமெல்லாம் தருவாய் - நல்லை
(முருகா)

*அனுபல்லவி*

அன்புடன் உனை அழைக்கும் பொழுதில் - குமரா
அரவணைப்பாய் வந்து எளிதில்
(முருகா)

*சரணம்*

தாவிடும் மனதுடன் தவிப்போம் - நாம்
பாடிடும் குமரனைப் பணிவோம்
ஓடிவந்தருள் தாராய் - முருகா
உன்னடி சரணம் என்கின்ற போதில்
(முருகா)

- நல்லூர் ஜெகசுபதா.

## கனிவின் கருப்பொருளே!

*இனிமைக்கு இலக்கணமாய் இலங்கும் வேலன்*
*இன்தமிழை இதயத்தால் இசைக்கும் வேலன்*
*கனிவுக்குக் கருப்பொருளாய் காணும் வேலன்*
*கந்தனெனும் பேர்படைத்த கடம்ப வேலன்*

*கிழவிக்குக் கனிகொடுத்த குழந்தை வேலன்*
*கீர்த்திபெறு சூரனையே வதைத்த வேலன்*
*பழனியிலே பிடிவாதம் பிடித்த வேலன்*
*நல்லையிலே மயிலேறி வரும் வேலன்.*

- கே.மகேஸ்வரி.

## நல்லையில் நடமிடும் நாயகா!

ஓம் என்ற சொல்லுக்கே- சொல்வர்
ஓராயிரம் பயனுண்டாம்

ஓம் முருகா என்றிட்டால் - மேலும்
இணையாக வேறுண்டோ

என்றும் நின் தயவிருக்க - எமக்கு
யாதொன்றும் குறையில்லை

நாளும் உன் துதிபாடி - நல்
பயன் பெற்றோம் பல கோடி

நல்லையம்பதி தனில் - உன்னை
தரிசித்தல் பெருமையையா

காத்திடுக எமையெல்லாம்- உன்
ஓரக்கண் பார்வையினால்

- பாலகன்.

## அலங்காரக் கந்தனே...

அலங்காரக்கந்தனே அழகா - தமிழ்
குலங்காக்க வந்த முத்துக்குமரா - நின்
தலம் தேடி வந்தோமையா
நலம் தந்து தந்தருள்வாய்
குறவள்ளிக்கணவா - திரு
நல்லைப்பதி வாழும் வேலா
பார் எங்கும் சமரசம் உலாவ...
சீர்பெற்று சிறந்திருக்க
வீதி வலம் வாருமையா!

- அனலைக்குமரன்

## வரமது அருள்வாய்

அடியவர் துயர் தீர்க்கும் வேலவனே
அமைதி வேண்டி நிற்கின்றோம் நாமே
அதர்மம் அழிந்து தர்மம் வென்றிட
அனைவரும் வரம் வேண்டி நிற்கின்றோம்
அன்புக் கரம் கூப்பி அழைக்கின்றோம்
வரமது அருள்வாய் நல்லூரானே!

- கு.கௌஷி

# இன்று 18.08.2005 நல்லறமாம் இல்லறவாழ்வில்



50 வருட பூர்த்தி

❖ யாழ்.போதனா வைத்தியசாலை முன்னாள் மேற்பார்வையாளரும்
❖ யாழ்.சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கனக் கடன் நிவிர்த்திச் சங்கம்.
யாழ்.அரசினர் வைத்தியசாலை கூட்டுறவு நலன்புரிச் சங்கம்,
சிற்றுண்டிச்சாலை,
வைத்தியசாலை,
சைவக்கோயில் ஆகியவற்றை ஆரம்பித்த முன்னோடியும்
அகில இலங்கை சுகாதாரத் திணைக்களத் தொழிற்சங்க ஸ்தாபகரும் முன்னாள் இணைச் செயலாளரும்
அரச தொழிலாளர் தொழிற்சங்கச் சம்மேளன (G.W.T.U.F.) முன்னாள் யாழ்.பிராந்திய செயலாளரும்
நீர்ப்பாசனத் திணைக்கள முன்னாள் சிரேஷ்ட லிகிதரும்
❖ முன்னாள் தொழிற்சங்கவாதியும் கூட்டுறவாளருமான

**திரு.S.R.அருமைநாயகம்**
**திருமதி அருமைநாயகம்பகவதி**

தம்பதியினரை ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் அருளால் நீடுவாழ்க என வாழ்த்துவோர்

**பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**மருமக்கள், உற்றார்,**
**உறவினர், நண்பர்கள்.**
*அராலிவடக்கு.*

(38795)(11-13-50)

திரு.திருமதி
**S.R.அருமைநாயகம் பகவதி தம்பதிகள்**

## விவசாயக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ்.மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பயிர் உற்பத்தி தொடர்பான முன்னேற்ற செயற்பாடுகள், விவசாய காப்புறுதிகள், மரநடுகை, மீன்பிடி, பனை - தென்னை அபிவிருத்தி போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(75-204-202)

## கைதடியில் அடுத்த வாரம் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு!

கைதடி முதியோர் இல்லத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் திரிகின்ற கட்டாக்காலிநாய்களை அழித்தொழிக்கும் பணியை சாவகச்சேரி பிரதேசசபை அடுத்தவாரம் மேற்கொள்ளவுள்ளது. அதனை அண்டிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களை கட்டி வளர்க்குமாறு பொதுச் சுகாதார பரிசோதகர் என்.கஜேந்திரன் கேட்டுள்ளார். (9-75)

# முதலாம் வருட திருமண நிறைவு நாள் வாழ்த்துக்கள்




**கனடா ரொறன்ரோவைச் சேர்ந்த**
**கௌரிசங்கர் ஜெயகௌரி தம்பதிகள்**

முதலாம் வருட திருமண நிறைவு நாளினை இன்று (18.08.2005) வியாழக்கிழமை கொண்டாடுகின்றார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, அண்ணா, கனடாவில் வசிக்கும் அன்புத்தம்பி வசந்தன், சிவச் சந்திர மாமா குடும்பம், குமாரசுவாமி சித்தப்பா குடும்பம், தேவன் மாமா குடும்பம், சுவிஸிலிருக்கும் ராஜேந்திர சித்தப்பா குடும்பம், ஜேர்மனியில் வசிக்கும் உத்தம சித்தப்பா குடும்பம், யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களாகிய அன்பு அப்பு, அம்மம்மா, உதயன் மாமா குடும்பம், பாஸ்கர சித்தப்பா குடும்பம் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையாரின் அருள்வேண்டி பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(38849)(52-11-13)

பெரியவிளான், இளவாலை.
தகவல் : அப்பா, அம்மா, அண்ணா மயூரன்


## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (38141)



## கருமாரி அம்மன் ஜோதிடம்

**ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார்.
கைரேகை மூலமாக - நடந்தவை. நடக்கின்றவை. நடக்கப்போகின்றவை மற்றும் தொழில். வியாபாரம். கல்வி. கணவன்-மனைவி ஒன்று சேர்தல். வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன், அறை எண் 9,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.(38399)(26.18.34.42)
T.P.No.: 0779233191


## பஸ்ஸிற்குக் காத்திருந்தபோது ஹன்டர் மோதி பெண் காயம்!

தென்மராட்சி,ஓக.18

கட்டுப்பாட்டினை இழந்த ஹன்டர் வாகனம் பஸ் நிலையத்தில் நின்ற யுவதியை மோதிக் காயப்படுத்தியதுடன் பஸ் நிலையத்தையும் சேதப்படுத்தியது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

பஸ்ஸிற்காகக் காத்திருந்த கைதடி - நுணாவிலைச் சேர்ந்த சிவகுருநாதன் சிவவதனி (வயது 24) என்ற பெண்ணே இவ்விபத்தில் காயமடைந்தவராவார்.

பஸ் நிலைய இருக்கையில் அமர்ந்திருந்த பெண்ணை ஹன்டர் வாகனம் நசித்துக் காயப்படுத்தியதாகவும் வாகனத்திற்கும் இருக்கைக்குமிடையில் சிக்கிய யுவதியை பொதுமக்கள் மீட்டு காப்பாற்றினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (9-117)


# திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



\+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
\+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090,
077-3086939,
0777-246117,
077-6018467. (38657)

தொடர்பு: ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


## நல்லூர்ப் பிரிவில் 8 வீதிகள் இவ்வருடம் புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஓக.18

2005ஆம் ஆண்டின் வரவு- செலவு திட்டத்தின் கீழ் நல்லூர்ப் பிரதேச சபையினால் 8 வீதிகள் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் உள்ள வீதிகளே பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளின் பேரில் தெரிவுசெய்யப்பட்டு புனரமைப்புச் செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்லிட்டு, தாரிட்டுப் புனரமைப்புச் செய்வதற்குத் தெரிவாகியுள்ள வீதிகளின் விவரம் வருமாறு:

* கொக்குவில் மேற்கு காந்திஜீ வீதி,
* கல்வியங்காடு பூதவராயர் வீதி ,
* திருநெல்வேலி மடம் வீதி,
* கல்வியங்காடு மடம் வீதி,
* கொக்குவில் 2 ஆம் குறுக்கு வீதி,
* கொக்குவில் வைரவர் வீதி,
* கோண்டாவில் மேற்கு வீதி,

இத்துடன் கொக்குவில் உப அலுவலக கொல்களமும் திருத்தம் செய்யப்படவுள்ளது. அநேகமாக இப்பணிகள் யாவும் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படலாம் என நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (த-12)





**இதோ...**
வெளிவந்துவிட்டது ஆகஸ்ட் மாத

# பூங்கனி

சிறுவர் மாத இதழ்

சிறுவர்கள் விரும்பி வாசிக்கும் சகல அம்சங்களையும் தாங்கி புதிய பரிமாணத்துடன் வெளிவந்திருக்கிறது

நாடு முழுவதுமுள்ள சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கிறது.
(38509)

"வாசிப்பு ஒன்றே பூரணமான எதிர்காலத்தை உருவாக்கும்"


# கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்

CHRISTA SEVA ASHRAM

*மருதனார் மடம், சுன்னாகம்*

## 6ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகள்

2005ஆம் ஆண்டு
ஆவணி மாதம் 20ஆம் திகதி சனிக்கிழமை

✠ காலை 7.30 மணி - பரி.நற்கருணை ஆராதனை
✠ காலை 9 மணி - நன்றி செலுத்தும் வழிபாடு
✠ முற்பகல் 11 மணி - உரையாடல்
✠ மதியம் 12 மணி - மன்றாட்டு நேரம் மதியபோசனம்

*பிற்பகல் 3 மணி பகிரங்கக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும்*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆச்சிரம பரிபாலன சபை.**

(38908)(42-13-16-29)

# நெஞ்சை விட்டகலாத நினைவுகளுடன்...

ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 - 09 - 1924
மறைவு 29 - 08 - 2004

**திருமதி யோகரத்தினம் நடராசா**
*திதி: 18-08-2005 சதுர்த்தசி*

16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02 - 10 - 1919
மறைவு 18 - 08 - 1989

**அமரர் விஸ்வலிங்கம் நடராசா**
*திதி: 20-08-2005 பிரதமை*

**பெற்றெடுத்த நாள் முதலாய் எம்மை அரவணைத்து அன்போடும் பண்போடும் அறிவூட்டி வளர்த்த எங்கள் தெய்வங்களின் நினைவுடன் வாழும்,**

**75, பிறவுண் வீதி,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்.**
(38946)(24-13-16-29)

*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

# யாழ்.தொழில்நுட்ப நிறுவனத்தின் கட்டடப் பணிகளுக்கு ரூ.15 கோடி

## பொறியியல், தகவல்தொழில்நுட்ப பீடங்கள் அமையும்

வலி.தெற்கு, ஓக.18

யாழ்ப்பாணம் தேசிய உயர் கல்வி தொழில்நுட்ப நிறுவனத்துக்கான பொறியியல்பீடம், தகவல் தொழில்நுட்ப பீடம் என்பனவற்றை அமைப்பதற்காக சுமார் 15 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனக் கட்டடப் பணிகளுக்கென இந்நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குவைத் அரசின் கடனுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள இந்த நிதி உதவியைக் கொண்டு எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் பொறியியல் பீடம், தகவல்தொழில்நுட்ப பீடம் என்பவற்றுக்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. யாழ்ப்பாணம், குருநகர், பீச் றோட்டில் இக்கட்டடங்கள் அமையவுள்ளன.

யாழ். அரச அதிபரால் குருநகர் பழைய களஞ்சியப் பகுதியில் 2.4 ஏக்கர் காணி இதற்கென வழங்கப்பட்டுள்ளது.

கட்டட நிர்மாண தொழில்நுட்பத்துறை, தானியக்க இயந்திரப் பொறியியல் தொழில்நுட்பத்துறை, மின்சாரமும் எந்திரவியலும் தொழில்நுட்பத்துறை, விவசாய தொழில்நுட்பத்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, கணனி வன்பொருள் தொழில்நுட்பத்துறை போன்ற பல்வேறு வகையைச் சேர்ந்த துறைகள் மேற்படி கட்டடங்களில் எதிர்காலத்தில் செயற்படவுள்ளன என்று தேசிய உயர் தொழில்நுட்ப வட்டாரங்கள் தெரிவித்தன. (9-152)

# இணுவில் வாசிக்குப் பரிசில்

வரணி,ஓக.18

தேசிய சேமிப்பு வங்கியின் 44 ஆவது 'ரிதிரேகா' சீட்டிழுப்பில் இரண்டாவது பரிசிலான ரூபா 10 லட்சம் இணுவில் வாசி ஒருவருக்குக் கிடைத்துள்ளது. ஜூலை மாதம் 29 ஆம் திகதி சேமிப்பு வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்ற இச்சீட்டிழுப்பில் இணுவிலைச் சேர்ந்த செல்வி எஸ்.மதுஸா என்பருக்கே இப்பரிசில் கிடைத்துள்ளது. (9-170)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# பண்டத்தரிப்பு சித்த வைத்தியசாலைக்கு ஆளணி நியமிக்க அனுமதிதரக் கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஓக.18

பண்டத்தரிப்பில் கடந்த மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கான ஆளணி நியமனத்திற்கு அனுமதி வழங்குமாறு வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் செயலாளர் மேரிஜோசப் சாந்தசீலன் உயரதிகாரிகளைக் கோரியுள்ளார்.

இந்த வைத்தியசாலைக்கான வைத்தியர்கள் மற்றும் மருந்துக் கலவையாளர் ஆகிய பதவிகளுக்கான ஆளணி நியமன அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என்றும் -

இதனை விரைவில் வழங்கி உதவுமாறும் - அவர் கேட்டுள்ளார்.

இதுதொடர்பான கடிதத்தைத் திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் ஊடாக வடக்கு - கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சிற்கு அவர் அனுப்பிவைத்துள்ளார்.

இப்பகுதி மக்கள் நீண்டகாலமாக விடுத்திருந்த வேண்டுகோளையடுத்து கடந்த மார்ச் மாதத்தில் திறக்கப்பட்டு இயங்கிவரும் இந்த இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் பெரும் எண்ணிக்கையிலான நோயாளர்கள் தினமும் சிகிச்சைபெற்று வருகின்றனர். பண்டத்தரிப்பு, சில்லாலை, பிரான்பற்று மாதகல், வடலியடைப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்கள் இங்கு சிகிச்சைபெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

# சட்டவிரோத மின்பாவனை ஒழிப்பு; ஒத்துழைக்க பொலீஸார் தயக்கம்

யாழ்ப்பாணம்,ஓக.18

சட்டவிரோதமான முறையில் மின்னிணைப்புப் பெறுவோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப் பொலீஸார் தயக்கம்காட்டிவருகின்றனர் என்று யாழ். மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றித் தகவல் தருகையில் அவர் மேலும் கூறியதாவது:-

கிராமங்களில் சட்டவிரோதமான முறையில் மின்னிணைப்புப் பெறுவோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது. அதனால், சட்டப்படி மின்னிணைப்புப் பெற்றுள்ளோர் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மின்சார சபை ஊழியர்களோடு இணைந்து மேற்கொள்வதற்குப் பொலீஸார் தயக்கம்காட்டிவருகின்றனர் - என்றார்.

யாழ்.சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி கொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து சிவில் நடவடிக்கைகளில் ஈடுபடப் பொலீஸார் தயக்கம் காட்டிவருகின்றனர் என்றும் கூறப்பட்டது. (9-ரி)



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் நடத்தப்பட்ட 'மினிமுத்து' அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற வாடிக்கையாளர் ஒருவருக்கு தங்க நாணயம் வழங்கும் நிகழ்வு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

யாழ்.பிராந்திய முகாமையாளர் திருமதி ஆர்.எவ்.அரியநாயகம் வெற்றிபெற்ற வாடிக்கையாளருக்குத் தங்கநாணயம் வழங்குவதையும் அருகில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை முகாமையாளர் பா.சத்தியன், அபிவிருத்தி முகாமையாளர் எஸ்.கலாதரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (8-7)

# நல்லூர் பிரதேச சபையினால் மூன்று திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.18

உள்ளூராட்சித் திணைக்கள அனுசரணையின் கீழ் நல்லூர் பிரதேச சபையினால் மூன்று வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வேலைத்திட்டங்கள் யாவும் விரைவில் பூர்த்தியாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கோண்டாவில் பொதுநூலகம் புனர்நிர்மாணம், கொக்குவில் மேற்கு ஸ்ரீ அம்பாள் வீதி கல்லிட்டுத் தாரிடல், திருநெல்வேலி குடியேற்றத்திட்டப் பொதுக்கிணறு, நீர்த்தாங்கி திருத்தல் ஆகிய வேலைத்திட்டங்களே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி புனரமைப்புப் பணிகள் யாவும் விரைவாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்று நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (9-12)

# 73 முன்பள்ளிகளுக்குக் கட்டடங்கள்

கரவெட்டி,ஓக.18

வடமராட்சியில் 73 முன்பள்ளிகளுக்குக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் தற்போது 35 முன்பள்ளிகளின் கட்டடங்கள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. ஏனைய 37 முன்பள்ளிகளுக்கும் துரிதகதியில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

மேற்படி முன்பள்ளிகளில் 'வேர்ல்ட் விஷன்' நிறுவனம் 17 பள்ளிகளுக்கும் 'ரூம் ருநீஸ்ட்' 13 பள்ளிகளுக்கும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் 16 பள்ளிகளுக்கும் வாழும் கலையகம் 10 பள்ளிகளுக்கும் 'கியூமெடிக்கா' 10 பள்ளிகளுக்கும் சர்வோதயம் 5 பள்ளிகளுக்கும் 'ரி.ஆர்.ஓ.' நிறுவனம், லயன்ஸ் கழகம் ஆகியவை தலா ஒரு பள்ளிக்கும் கட்டடம் அமைக்கும் பொறுப்பை ஏற்றுச் செயற்படுத்தி வருகின்றன. வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் துரை சத்தியசீலன் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார். (ஒ-70)

# வரணியில் சிரமதானம்

வரணி,ஓக.18

வரணி சமுர்த்தி வங்கிக் கட்டடம் அமைந்துள்ள காணி அண்மையில் சிரமதான மூலம் துப்புரவு செய்யப்பட்டது. சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் இச்சிரமதான நிகழ்வில் பங்குகொண்டனர்.

சமுர்த்தி வங்கிக் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் விரைவில் இக்கட்டடம் திறந்து வைக்கப்பட உள்ளதாகக் கூறப்பட்டது. (ஒ-170)

# டைனமற் வைத்திருந்த மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக.18


டைனமற் கடத்த முற்பட்டவர்கள் எனக் கூறப்படும் மூன்று இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் கடந்த சில நாள்களுக்கு முன்னர் குருநகர் கடற்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குருநகர் கடற்பகுதியில் வைத்து டைனமற் வெடிபொருள்களுடன் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட மூன்று இளைஞர்களும் யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

மூவரும் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களில் இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மீன்பிடித்தொழிலை மேற்கொள்ளும்போது மணற்பிட்டி ஒன்றிலிருந்து வெடிபொருள்களைத் தாம் கண்டெடுத்தனர் என்றும் -

அவற்றைப் பொலீஸாரிடம் ஒப்படைக்க முற்பட்டபோதே படையினரால் தாம் கைது செய்யப்பட்டனர் என்றும் - இளைஞர்கள் மூவரும் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (9-12-ரி)



*யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் 75 பேர் கடந்த வாரம் இரத்ததானம் செய்திருந்தனர்.*

*யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் சிவசங்கர் தலைமையிலான குழுவினர் கல்லூரிக்குச் சென்று இரத்தத்தைச் சேகரித்திருந்தனர்.*

*இந்நிகழ்வில் கல்லூரியின் அருட்தந்தையர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் பங்குபற்றி இரத்ததானம் வழங்கினர்.*

# யாழ். தொழில் திணைக்களத்தில் உத்தியோகத்தர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ். தொழில் திணைக்களத்தில் தொழில் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் என்று யாழ். மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் பத்துத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தொழில் திணைக்களம் இயங்கி வருகின்றது. பத்துத் தொகுதிகளிலும் மொத்தமாகப் பத்துத் தொழில் உத்தியோகத்தர்கள் கடமைபுரிய வேண்டிய சந்தர்ப்பத்தில் ஒருவரே தற்போது பணியாற்றி வருகிறார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

தொழில் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையினை நிவர்த்திசெய்யவும் வடக்கு - கிழக்கிலிருந்து 21 உத்தியோகத்தர் களைத் தெரிவுசெய்யவும் போட் டிப் பரீட்சை ஒன்று நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் உதவி ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார். (9-ரி)

# தேர்ச்சி அறிக்கை

கைதடி,ஓக.18

மட்டுவில் தெற்கு வளர்மதி கல்விக்கழகத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கு இரண்டாம் தவணைப் பரீட்சையின் தேர்ச்சி அறிக்கை வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை வளர்மதி கல்விக் கழகத் தலைவர் ச.கிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்றது. (ஒ-75)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

வாங்கு, மேசை,கரும்பலகை, கதவு, பனைமரம், கோழிக்கூடு,கிழுவங்கதியால், கல்பேட்ஸ், றலி சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.3, லவ்லேன், உடுவில். T.P.: 077 9217992. (38955)

## உடனடி விற்பனைக்கு

2 **Sri xxxx Morris Miner Car, Deep-Frizer cooking Rang** (4 அடுப்பு), ஒரு ஸ்ரீலங்கா ரெலிக்கொம் தொலைபேசி இணைப்பு மற்றும் சகல வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. (காலை 9 மணி முதல் 4 மணி வரை) தொடர்பு: 19/3, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (38984)

## கார் விற்பனைக்கு

நிசான் சனி சில்வர் முழுவதும் குளிரூட்டப்பட்ட **Full Option Super Saloon** விற்பனைக்கு உண்டு. காலை 8.30 - மாலை 5 மணி வரை மட்டும் தொடர்புகொள்ளவும். 396, நாவலர் வீதி, முன்னைய உதயன் பணிமனை ஒழுங்கை, கையிலாய பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம். (38904)

## காணி விற்பனைக்கு

நல்லூர் - பருத்தித்துறை வீதியில் அமைந்த 6 பரப்புக் காணி முழுமையாகவோ பகுதியாகவோ விற்பனைக்குண்டு. தனி வீடு, அடுக்கு மாடி வீடு அமைப்பதற்கு உகந்தது. தொடர்பு: 0777325545. (சி-44535)

## வீடு வாடகைக்கு

கேணியடிலேன், கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் சகல வசதிகளுடனும் கூடிய பெரிய வீடு வாடகைக்குண்டு. வீட்டை நன்றாகப் பராமரிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 0773222727, 0777582205. (38992)

## காணவில்லை

JC கலப்பின பிறவுண் கலர் நெற்றியில் வெள்ளை பசுமாடு கடந்த 12.08.2005 வெள்ளிக்கிழமை முதல் காணவில்லை. கண்டவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் (சன்மானம் வழங்கப்படும்). T.P.:2227161. (38959)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த **London** இல் **Consultant Physician** (வைத்தியர்) ஆக இருக்கும் விவாகரத்துப்பெற்ற பொறுப்புக்கள் இல்லாத மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பிற்கு 021-222 6366. (38991)

## தேவை

3 பேர் கொண்ட குடும்பத்திற்கு திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் ஆகிய பகுதியில் நல்ல சூழலில் வீதிக்கு அண்மித்ததாக சிறிய வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு: இல.3, கலட்டிச் சந்தி. T.P.: 0773206207 (ஆதி) (38955)

## தவறிவிட்டது

தெளிவரை, பூநகரியைச் சேர்ந்த ஆறுமுகம் கரிகரன் என்பவரது தேசிய அடையாள அட்டையும் வன்னிக்குச் செல்லும் அனுமதி அட்டையும் 15.08.2005 திங்கட்கிழமை முகமாலைக்கும் நல்லூரிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தொடர்பு: ஆ.மனோகரன், 68/18, சட்டநாதர் வீதி, நல்லூர் - யாழ்ப்பாணம். T.P. 021-2223243. (39003)


## S.L.A.S.

**பொது அறிவு**

கட்டுரையும் சுருக்கி எழுதுதல் வினா-விடை பயிற்சிகள்

ஆசிரியர்- T. திருமுருகன்
விலை - 120=

| ஸ்ரீலங்கா புத்தகசாலை *யாழ்ப்பாணம்.* | திகழ் பதிப்பகம் K.K.S. *வீதி, இணுவில்.* |
|---|---|

## பதவி வெற்றிடம்

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அரைக்கும் ஆலையின் இயந்திர இயக்குநர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியான ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

கல்வித் தகைமை :- எட்டாம் வகுப்பு சித்தி.
சம்பளம் :- நேரில் பேசித் தீர்க்கப்படும்.
வயதெல்லை :-18-45 வரை.
விண்ணப்ப முடிவு திகதி :
*30.08.2005.*

(சி-44532) -பொது முகாமையாளர்.
(21-16-19)


## வீடும் காணியும் விற்பனைக்கு

ஊரெழுப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஆறுபரப்புடன் கூடிய புதிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 077 6180694 (38955)

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளியில் 4 பரப்புக் காணியில் அமைந்த 7 படுக்கையறைகளுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 325545. (சி-44536)


## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

PRIMA QUALITY CHICK — PRIMA BEST IN FEED

**திறப்புவிழா அழைப்பு**

உடுவில் பாம் சென்ரர்

**Original Prima கோழித்தீன் விற்பனை நிலையம்**

19.08.2005 காலை
9.30 மணிக்கு எமது நிலையத்தை
ஆரம்பிக்க உள்ளதால்
வாடிக்கையாளர்கள், ஆர்வலர்கள்
சகலரையும் கலந்து சிறப்பிக்கும்
வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்

குறிப்பு : Prima கோழித்தீன் 2 கிழமைக்கு 5%விசேட கழிவு வழங்கப்படும்.

உடுவில் பாம் சென்ரர்
(கமநல சேவைகள் சுற்றுவட்டம்)
ஆலடி, உடுவில்.

*ஏக விநியோகத்தர் :*
*Nallur Farm Center,*
**19,Murugesar Lane,**
**Nallur,Jaffna.**

S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

**தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்**




Rediffusion DYR

**எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்**

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீர்க்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுரூக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741

# பெண்ணினமே அடிமை என்ற இழிநிலையை மாற்றி வைத்த வரலாற்று நாயகிகள்

*தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண் புலிகளின் முதலாவது அணி பயிற்சி முடித்து வெளியேறி இன்றுடன் 20 ஆண்டுகள் நிறைவடைகின்றன. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.*

பெண்கள் எவரும் வீட்டைவிட்டு வெளியேவராத - வீட்டைவிட்டு வெளியேவர அனுமதிக்கப்படாத காலம் ஒன்று இருந்தது.



பெண்கள் என்றாலே மென்மையானவர்கள் - அவர்களால் ஆண்களைப்போல எதுவும் செய்யமுடியாது - என்ற கண்ணோட்டம் ஈழத்தமிழ் சமுதாயத்திலே நீண்டகாலமாகப் புரையோடிப்போய்க் கிடந்தது. பெண்கள் கல்வி கற்கக்கூடாது, கண்டபடி வெளியே வரக்கூடாது, அடக்க ஒடுக்கத்துடன் ஆண்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கவேண்டும், சமைத்துப் போடுவதும் கணவனுக்குப் பணிவிடை செய்வதும் பிள்ளைகளைப் பெற்றுப் பராமரிப்பதும்தான் பெண்களுடைய கடமை என்றெல்லாம் எழுதப்படாத விதிகள் எமது சமூகத்தில் நடைமுறையில் இருந்துவந்தன.

இத்தகைய சமூக மூடநம்பிக்கைக்குள் சிக்குண்டு அவற்றிலிருந்த மீண்டுவரமுடியாமல் தவித்துக்கொண்டிருந்தது பெண்ணினம். பெண்கள் மீதான சமூக ஒடுக்குமுறைகள் தலைவிரித்தாடிய காலப்பகுதியில், சிங்களப் பேரினவாதம் ஒட்டுமொத்த தமிழர்மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டது.

தான்சார்ந்த சமூகத்தினது ஒடுக்குதல்களிலிருந்து தன்னை விடுத்துக்கொள்ள வேண்டிய அதேநேரம், தனது இனத்தின் மீது திணிக்கப்பட்ட பேரினவாத அடக்குமுறைகளையும் உடைத்தெறியவேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் ஈழத்தமிழ்ப் பெண்ணினத்தின் முன்னால் எழுந்தது.

இரண்டு சவால்களுடன் மல்லுக்கட்டி வெல்லவேண்டிய காலத்தின் கட்டாயம் தமிழ்ப் பெண்களை உந்தித்தள்ளியது.

இந்தப் பின்னணியில்தான் பெண்கள் ஆயுதம் ஏந்திப் போராடப் புறப்பட்டார்கள்.

1984/85 காலப்பகுதி தமிழர் வரலாற்றின் வாழ்வியலில் மிகவும் முக்கியமான - திருப்பத்தை ஏற்படுத்திய காலம் எனலாம்.

அந்தக் காலத்தில்தான் ஈழத் தமிழ்ப் பெண்கள் தம்மீதான சமூகப் பார்வையை மாற்றியமைத்து ஆண்களுக்கு நிகராக ஆயுதம் ஏந்திப் போராடப் புறப்பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் வழியில் பேரினவாத அடக்குமுறைக்கு எதிராகப் போராடிய இளைஞர் கூட்டத்தோடு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பெண்களும் இணைந்து ஆயுதம் ஏந்தினர்.

தங்கமாலைகளை அணிவதும் தம்மை அழகுபடுத்துவதும் வீட்டினுள் அடங்கிக் கிடப்பதும் தான் தமக்கான லட்சணம் என்றிருந்த பெண்கள், அவற்றையெல்லாம் தூக்கி வீசிவிட்டு நஞ்சு மாலைகளைக் கழுத்தில் கட்டிக்கொண்டு தனது இனத்துக்காக - மக்களுக்காக உயிரைவிடத் தயாராக இருப்பதே லட்சியம் என்று உணர்ந்துகொண்டு வீறுநடை போட்டார்கள்.

தமிழ்ப் பெண்கள் தொடர்பாக தனது மனதிலே போட்டுவைத்திருந்த, கற்பனை பண்ணியிருந்த வரையறைகள் சிதறுண்டு போனதைக் கண்டு சிங்களம் கதிகலங்கியது.

18.08.1985....

ஈழத்தமிழர் வரலாற்றில் அந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு நடந்தேறியது.

யாருமே எதிர்பார்த்திராத அன்றைய அந்திப் பொழுதில் காற்றலைகளில் பரவிய அந்தச் செய்தியால் தமிழினம் தனது தலைகளை நிமிர்த்திக்கொண்டது; புருவங்களை உயர்த்திநின்றது.

சுடுகலன்களை கையில் ஏந்திக்கொண்டு நஞ்சுகளை கழுத்தில் கட்டிக்கொண்டு பெண்புலிகள் சேனையொன்று சமராடப் புறப்பட்டது.

பெண்கள் என்றால் அடிமைகள் என்ற இழிநிலையை மாற்றிவைத்த வரலாற்று நாயகிகள் உருப்பெற்ற அந்தநாள் ஈழத்தமிழருக்கு மட்டுமல்ல உலகத்தமிழருக்கே உவகையளித்த பொன்நாள் என்றால் அது மிகையல்ல.

பெண்களை வெறும் போகப்பொருளாக



பார்த்த சமூகம் வாயடைத்து நின்றது.

அன்று எழுந்த தமிழீழ மகளிர் அணிகள் இன்றுவரை மகத்தான சாதனைகள் பலவற்றைப் புரிந்து உலக வரலாற்றில் தனித்துவம் மிக்கதாகத் திகழ்கின்றன.

**சந்திரமதனா**

தரைப்புலிகளாக, கடற்புலிகளாக, கரும்புலிகளாக பல்வேறு படைப்பிரிவுகளில் ஆண்களுக்கு சற்றும் சளைக்காமல் வெற்றிகளைப் பெற்றுத்தந்த பெண்புலிகளின் ஆயிரக்கணக்கானவர்கள் வீரகாவியம் ஆகிவிட்டனர். 20 ஆவது ஆண்டு நிறைவில் கல்லறைகளில் உறங்கும் தமது தோழியரின் நினைவுகளோடு இன்னும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு தேசத்தலைவனின் சுட்டுவிரல் அசையும் திசை நோக்கி வீறுநடைபோடக் காத்திருக்கின்றனர் புலிப்பெண்கள். ✱



ஏழு பாடசாலைகள் பங்குபற்றும் சமாதானத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்றுக் காலை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. ஆரம்ப நாள் நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. ஆரம்பநாள் நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் அல்போன்ஸ் சுபறூன் மற்றும் கல்லூரி அதிபர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் வீரர்கள் பாண்ட் வாத்தியம் சகிதம் அழைத்துவரப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

## சமாதான உதைபந்தாட்டம் கோலாகலமாக ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.18

ஏழு பாடசாலைகள் பங்குபற்றும் சமாதானக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்

**விளையாட்டு**

போட்டி நேற்றுக் காலை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

ஆரம்பநாள் நிகழ்விற்குப் பிரதமவிருந்தினராக சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் அல்போன்ஸ் சுபறூன் கலந்துகொண்டு போட்டிகளினை ஆரம்பித்துவைத்தார்.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது. சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

அடுத்து இடம்பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் ஹாட்லிக் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

கொழும்பு பீற்றர்ஸ் கல்லூரி அணிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (9-190)

## வரணி மகாவித்தியாலயமும் கொடி. திருநாவுக்கரசும் சம்பியன்

தென்மராட்சி, ஓக.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 17 வயது, 19 வயது ஆகிய பிரிவு பெண்கள் அணிகளுக்கிடையிலான கரபந்தாட்டப் போட்டிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அணியும், வரணி மகாவித்தியாலய அணியும் முதலிடங்களைப் பெற்றுச் சம்பியனாகின.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற போட்டியில் 17 வயதுப் பிரிவில் எட்டு அணிகளும் 19 வயதுப் பிரிவில் ஏழு அணிகளும் கலந்துகொண்டன.

17 வயதுப் பிரிவில் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய அணியும், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணியும், முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றன.

19 வயதுப் பிரிவில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணியும், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அணியும் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றன. (9-117)

## துப்பாக்கி சுடுதல்

லண்டன், ஓக.18

பிரேஸிலில் உள்ள அமெரிக்கானா நகரில் உலக துப்பாக்கி சுடுதல் போட்டி நடந்தது. இதில் ஆண்களுக்கான ஸ்கீட் பிரிவில் 16 வயது இளம் வீரரான அமெரிக்காவின் வின்சென்ட் ஹன்காக் 149 புள்ளிகள் பெற்று தங்கம் வென்றார். லீக் சுற்றில் இவர் 124 புள்ளிகளும், இறுதிச் சுற்றில் 25 புள்ளிகளும் பெற்றார். இதன் மூலம் அதிக புள்ளிகள் பெற்ற உலக சாதனையை இவர் சமன் செய்துள்ளார். சைப்ரஸ் நாட்டின் ஜார்ஜ் அச்சிலோஸ் 148 புள்ளிகளுடன் (123 + 25) வெள்ளி வென்றார்.

## ஆதிக்கம் தொடரும் என்கிறார் மைக்கேல் வான்

'ஆஷஸ் தொடரில் எங்களின் ஆதிக்கம் தொடரும். அடுத்த டெஸ்டில் ஆஸ்திரேலியாவை வீழ்த்துவோம்' என சபதமிடுகிறார் இங்கிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் மைக்கேல் வான்.

இங்கிலாந்து வந்துள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்டில் ஆஸ்திரேலியா 239 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இதன் பின் இங்கிலாந்து அணியின் ஆதிக்கமே காணப்படுகிறது. இரண்டாவது போட்டியில் இவர்கள் 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றனர். மான்செஸ்டரில் நடந்த மூன்றாவது டெஸ்டை ஆஸ்திரேலியா தட்டுத்தடுமாறி சமன் செய்தது.

423 ஓட்ட இலக்குடன் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி கடைசி மற்றும் ஐந்தாம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்தின் அனல் பறக்கும் பந்துவீச்சில் தாக்குபிடிக்க முடியாமல் திணறியது. அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் 156 ஓட்டம் எடுத்து அணியை தோல்வியிலிருந்து மீட்டார்.

கடைசி நேரத்தில் வார்ன், பிரட் லீ, மெக்ராத் ஆகியோர் கைகொடுக்க ஒரே ஒரு விக்கெட் எஞ்சியிருந்த நிலையில் ஆட்டத்தை சமன் செய்தனர். இரண்டாவது இன்னிங்ஸில் இந்த அணி 9 விக்கெட் இழப்புக்கு 371 ஓட்டங்கள் எடுத்தது.

இது குறித்து இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கேல் வான் கூறுகையில், "மான்செஸ்டரில் கடைசி ஒரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தால் தொடரில் 2:1 என்ற முன்னிலை பெற்றிருக்கலாம். ஆனால், இப்போட்டி சமன் ஆனதால் நாங்கள் ஏமாற்றமடைந்து விடவில்லை. கடந்த இரண்டு டெஸ்டிலும் எங்கள் வீரர்களே முழுமையாக ஆதிக்கம் செலுத்தியுள்ளனர். இதைப் பார்த்து பெருமைப்படுகிறேன். எங்களின் இந்த ஆதிக்கம் தொடர் முழுவதும் நீடிக்கும். அடுத்த டெஸ்டில் கட்டாயம் ஆஸ்திரேலியாவை வீழ்த்துவோம்," - என்றார்.

கடந்த எட்டு ஆண்டுகளாக ஆஷஸ் கோப்பையை ஆஸ்திரேலிய அணி தக்கவைத்து வருகிறது. ஆனால், இம்முறை இவர்களின் பிடி கொஞ்சம் கொஞ்சமாக நழுவுகிறது. இதனால் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு சொந்த மண்ணில் இளம் இங்கிலாந்து அணி கோப்பை வெல்லும் வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது. நான்காவது டெஸ்ட் வரும் 25 ஆம் திகதி டிரன்ட் பிரிட்ஜ் நகரில் தொடங்குகிறது.

மான்செஸ்டர் டெஸ்டில் ஆஸ்திரேலியாவின் கிளென் மெக்ராத் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன்மூலம் அதிக ஓட்டம் எடுத்த கடைசி விக்கெட் வீரர் என்ற புதிய சாதனை படைத்துள்ளார். இவர், 11 ஆவது வீரராக களமிறங்கி இதுவரை 555 ஓட்டங்கள் எடுத்துள்ளார். முன்னதாக, வெஸ்ட் இண்டீசின் வால்ஷ் 553 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

## நான்காவது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 14 - 06 - 1935



விண்ணில் 01 - 08 - 2001

### அமரர் இளையவி மருதலிங்கம்

நான்கு ஆண்டுகள் மறைந்திடினும் மாறாது நினைவலைகள்
நலமுடனே நாயகன்தாள் சேர்ந்திடவே வேண்டிநிற்கும்:

அம்மன் கோவில் வீதி,
நாவறகுழி கிழக்கு,
(சி-44539)(26-14-15)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் 13 - 07 - 1932



அஸ்தமனம் 28 - 08 - 2004

### கந்தையா குணசிங்கம்

ஓராண்டு கடந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவு
வரமொன்று கேட்கின்றோம்
வரவேண்டும் குழந்தையாய்
மீண்டும் எம்மிடம்.....!

இன்று (18-08-2005) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

12, ஆ.வ. வீதி,
3ஆம் ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(39000)(26-14-15)

## கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக.18

ஆசிரியர் வி.ஜெயபாலின் பூங்கொடி கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் விவேகானந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். எஸ்.தங்கராஜாவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பூ.புலேந்திரராஜாவும் (கவிஞர் நல்லை அமிழ்தன்), சிறப்பு விருந்தினராக யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம், எஸ்.எம்.கோபாலரட்ணம், அராலியூர் நா. சுந்தரம்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ். கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்) திருமதி அருள்நேசன் மீராவும் நூலாய்வை 'நமது ஈழநாடு' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ச.ராதையனும் நிகழ்த்துவர். (9-202)

## மரண அறிவித்தல்

### பொன்னையா கிருபானந்ததேவன் (குஞ்சு)



கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொ.கிருபானந்ததேவன் (குஞ்சு) 15-08-2005திங்கட்கிழமை சுவிற்ஸலாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் மாதேவன், சதுர்முகதேவன், காலஞ்சென்ற மெய்கண்டதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் முரளி (குட்டி), மீரா (பிரான்ஸ்), ரேகா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கி.இரத்தினேஸ்வரி (மனைவி).

கலட்டி வீதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
(சி-44540)(26)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தெய்வானைப்பிள்ளை தம்பிராசா



பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை தம்பிராசா அவர்கள் (13.08.2005) சனிக்கிழமை அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான கனகசபை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகளும் தம்பிராசா அவர்களின் அருமை மனைவியும் சரோஜினிதேவி (கனடா), கௌசலாதேவி, இமசலாதேவி (கனடா), சிவரூபன் (லண்டன்),வக்சலாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் குணரத்தினம் (கனடா), கருணாகரன், ஜெயக்குமார் (கனடா), ஜெகதாசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பொன்னம்மாவின் அன்புச் சகோதரியும் பொன்னுத்துரை, பொன்னப்பா, கந்தசாமி, காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரி, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுரேந்தினி, டயானி, டினேஸ் (கனடா), கேசவன், பமிலா, கார்த்திகா, கேசவனிதன், தர்சிகா, சிந்திகா, பிரசன்னா, நிரோஜிகா (கனடா), வதுசன், டிசாந் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2005) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உள்ளிவிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தமேனி,
அச்சுவேலி.

தகவல்
தம்பிராசா (கணவர்), கருணாகரன் (மருமகன்)
(லொறிக்கருணா - ஆவரங்கால்).

(39010)(47-14-15-26)

### இராமசாமி வைகுந்தவாசன் (ஜேர்மனி)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி வைகுந்தவாசன் 15.08.2005 திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் இராமசாமி - பத்மலீலாவதியின் (கனடா) மூத்த மகனும் பரஞ்சோதி - அன்னலட்சுமியின் (கோண்டாவில் கிழக்கு) அன்பு மருமகனும் நிர்மலாதேவியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும் விஜனித்தா, சுயித்தா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தினதாசன், சிறினிவாசன் (கனடா), சுபாசினி (கனடா), சிவதாசன் (கனடா), சுவேந்தினி (கனடா), சுகந்தினி (கனடா) ஆகியோரின் சகோதரனும் ஸ்ரீபாஸ்கரன் (ஜேர்மனி), ஸ்ரீதரன் (ஜேர்மனி), கிருபாகரன் (சுவிஸ்), மாலினி (கோண்டாவில்) ஆகியோரின் மைத்துனரும் அம்பிகைபாதன் (சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்), சிவாசினி (ஜேர்மனி), சுதாஸ்கலா (ஜேர்மனி) புவேக்கா (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2005) வியாழக்கிழமை 12 மணிக்கு Ohrnberger - Str - 77 74177 Badfriedrich Shalt west Germany யில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(39015)(21)

தகவல்: ப.அன்னலட்சுமி (மாமி)
(ராசன்) ப.அம்பிகைபாதன் (சகலன்)
சோதி ஸ்ரோர்ஸ் -கோண்டாவில் ராசன்


இவ்வருடம் நடத்த திட்டமிடப்பட்டுள்ள
இலவச தொலைக்கல்வி பாடநெறிக்கான

# இலவச நேரடி வகுப்பு

இந்த இலவச பாடநெறியில் பதிவுசெய்வோருக்கு
அனுமதி, 60 பாட அலகுகள், நேரடி வகுப்புகள், பரீட்சை மற்றும்
சான்றிதழ் உட்பட அனைத்தும் முற்றிலும் இலவசம்.

நேரடி வகுப்பில் கதைத்தலுக்கான முழுமையான அடிப்படை கற்பிக்கப்படுகிறது.

பல வருடங்கள் ஆங்கில வகுப்புகளில் கற்றுக்கொள்வதை
இந்த இரண்டு மணிநேர வகுப்பில் பெற்றுக்கொள்ளலாம்

## இடம் : யாழ். மத்திய கல்லூரி
## காலம் : நாளை (19.08.2005)

**குறிப்பு :** 20ஆம் திகதி நடைபெறவிருந்த கருத்தரங்கு 19ஆம்திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது

**நேரம் :** 9. முதல் 11, 11.00 முதல் 1.00, 2.00 முதல் 4.00, 4.00(முதல்6.00)
(மேலுள்ள நான்கு வகுப்புகளில் ஏதாவதொன்றில் கலந்துகொள்ளலாம்)

குறிப்பு : இடம்போதாமை காரணமாக ஒவ்வொரு வகுப்புக்கும் முதலில் வரும் 500 பேரே வகுப்புகளுக்குள் எடுத்துக்கொள்ளப்படுவர்.

## அனுமதி முற்றிலும் இலவசம்

இதுவரை இலவச வகுப்புக்கு பதிவுசெய்யாதோர் வகுப்புகளில் கலந்துகொள்வதன் மூலம் பதிவுசெய்து புத்தகங்கள் மற்றும் அலகுகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற
ஒரு சமுதாயத்தினைக் கட்டியெழுப்புவோம்

**குறிப்பு :** வகுப்புகளில் கலந்துகொள்வோருக்கு SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள மற்றும் கணனிக்கற்கைநெறிகளிலும், ஆங்கில, சிங்கள, ஜெர்மன், மற்றும் பிரெஞ்சு புத்தகங்களிலும், SAAMSTECH இன் கணனி மற்றும் KNOWLED PACK இலும் 50 வீதம் சலுகைக்கட்டணம். இச்சலுகைகள் இலவச வகுப்பு நடைபெறும் இடத்தில் பதிவுசெய்வோருக்கு மட்டுமே.

## ஒவ்வொரு இரண்டு மணிநேர வகுப்பிலும் கற்பிக்கப்படும் பாட உள்ளடக்கம்

**30 நிமிடம் : கதைத்தலுக்கான அடிப்படை**

அவன் போக வேண்டும் (He must go), அவர்கள் சாப்பிட கூடும் (They might eat), அவன் எழுதி இருந்தான் (He had written), நீங்கள் விளையாட வேண்டியிருக்கிறது (You have to play) போன்ற அடிப்படை வசன உருவாக்கத்தில் அதிக வேகம் கதைத்தலுக்கு அவசியமாகும். 30 நிமிடத்தில் நூற்றிற்கு மேற்பட்ட வசனங்கள் மூலமாகப் பயிற்சி.

**30 நிமிடம் :சொல்வள விருத்தியாக்கம் மற்றும் அன்றாட வசனப் பழக்கப்படுத்தல**

அவன் மழையில் நனைகிறான் என்பது சிறிய வசனம். ஆனால் நனைகிறான் என்பதற்கு ஆங்கிலச் சொல் பலருக்குத் தெரியாது. அவசரப்படாதே என்பது தமிழில் ஒரு சொல். ஆங்கிலத்தில் ஒரு வசனம். இத்தகைய நூற்றுக்கணக்கான அடிப்படையான சொல்களும் வசனங்களும் பழக்கப்படுத்தல் மூலம் கற்பிக்கப்படும்

**50 நிமிடம் : பிரயோகங்கள்.**

இலக்கண வகுப்புகளில் கற்பிக்கப்படாத நூற்றுக்கணக்கான பிரயோகங்கள். உதாரணமாக அவன் வரவில்லை (he did not come) அவன் **வரவேயில்லை** (he did not come **at** all). அவர்கள் அங்கேயிருந்து வந்தார்கள் (They Came from there) அவர்கள் **அங்கேயிருந்து** வந்தார்கள் (கஷ்ரப்பட்டு,சிரமப்பட்டு)(They came all the way from there). உனக்கு தெரியாத**து போல்** நடிக்காதே (Don't act as if you don't know)

## முற்றிலும் இலவசம்

ஆசிரியர்கள், அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், வீட்டுப்பெண்கள், பெற்றோர் உட்பட அனைவரும் வகுப்புகளில் கலந்துகொள்ளலாம்.

இது ஒரு சந்தர்ப்பம்.......

# வன்னியில் கால்நடை அபிவிருத்திக்கு அடுத்தமாதம் முதல் புதிய நடைமுறைகள்

## தமிழீழ பொருண்மிய நிறுவனம் அமுல் செய்கிறது

பரந்தன், ஓக.18

வன்னிப் பெருநிலப்பரப்பில் கால்நடைகளின் அபிவிருத்திக்காகத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு புதிய நடைமுறைகளைக் கையாளவுள்ளது.

கால்நடை வளர்ப்போர் எதிர்கொண்டு வரும் பல முக்கிய பிரச்சினைகள் காரணமாக கால்நடைகள் அழிந்துபோகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அது அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கால்நடை வளர்ப்போர்கள் தாம் வைத்திருக்கும் கால்நடைகளின் விவரங்களை சரியான முறையில் வெளிப்படுத்தாத காரணத்தினால் கால்நடைகளுக்கு (ஆடு, மாடு) ஏற்பட்டுவரும் நோய்களுக்கு உரிய நேரத்தில் முன்னேற்பாடாக தடுப்பூசி மருந்துகளை ஏற்றுவதற்கு கால்நடை சுகாதாரத் திணைக்களமும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

தொற்று நோய் ஏற்படும் காலங்களில் சரியான புள்ளிவிவரம் இல்லாத காரணத்தினால் ஒரு பகுதி கால்நடைகளுக்குத் தடுப்பூசி மருந்துகளை ஏற்றிவிட்டு மிகுதியானவற்றிற்கு ஏற்றாது விடுவதனால் மருந்து ஏற்றிய, மருந்து ஏற்றாத எல்லா மாடுகளுக்குமே நோய் ஏற்பட்டு கால்நடைகள் அழிவுறும் அபாய நிலை இருப்பதை அவதானிக்க முடிகிறது.

நோய்த் தடுப்பிற்கான மருந்தினை எடுத்து வருவதற்கும் கால்நடைகளின் புள்ளிவிவரம் அவசியமாகத் தேவைப்படுகின்றது. அத்தோடு நல்லின மாடுகளையும் உழவு மாடுகளையும் இறைச்சிக்காக பயன்படுத்துவதனால் மாடுகள் அழிவுறும் அபாய நிலையும் ஏற்பட்டு வருகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு பத்துக்கு மேற்பட்ட மாடுகளை வளர்ப்பவர்கள் தமது பிரதேசத்திலுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர்களிடம் தமது கால்நடைகளின் விவரங்களைச் சரியான முறையில் பதிவுசெய்வதன் மூலம்-

* கால்நடைகளை இடத்திற்கு இடம் மாற்றுதல்.
* இறைச்சித் தேவைகளுக்கென விற்பனை செய்தல்.
* சொந்த இறைச்சித் தேவைக்கென பயன்படுத்துதல்.
* திட்டமிட்ட முறையில் இன அபிவிருத்தியை மேற்கொள்ளுதல்.
* உரிய காலத்தில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

போன்ற கால்நடை சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் இலகுவாக மேற்கொள்ளமுடியும்.

01.09.2005ஆம் திகதியிலிருந்து கால்நடைகளை வடபகுதிக்கு வெளியே கொண்டு செல்வதற்கான அனுமதி தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியகத்தால் மட்டுமே வழங்கப்படும் என்பதையும் கால்நடை வளர்ப்போர் கவனத்திற்கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (8-352)

## பயிற்சித் திட்டங்கள் குறித்து ஆராய்வு

பரந்தன், ஓக.18

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பயிற்சித் திட்டங்கள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான ஆராய்வுக் கூட்டம் ஒன்று கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர்கள், பயிற்சித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ள உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி செயலகம் வழங்கியுள்ள 18 கோடி ரூபா நிதியுதவியுடன் வடக்கு- கிழக்கு மாகாண சபையின் கைத்தொழில் அமைச்சின் பணிப்பாளர் சிவலிங்கக்கால் இந்தப பயிற்சித் திட்டங்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-352-202)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள்

# பள்ளமடு, அடம்பன் பகுதிகளில் நடமாடும் மருத்துவ சேவை

மன்னார் பள்ளமடு மருத்துவமனை, அடம்பன் தியாக தீபம் திலீபன் மருத்துசேவை நிலையத்திலும் சிறப்பு நடமாடும் மருத்துவ சேவை இடம்பெறவுள்ளது.

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த மருத்துவ நிபுணர் மற்றும் மருத்துவர்களான ஓவியன் யூட், பல் மருத்துவ போராளியான சுதர்சன் மருத்துவப் போராளி இறையொளி ஆகியோர் அடங்கிய மருத்துவக் குழுவினரால் சிறப்பு நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்பட்டுள்ளது.

பள்ளமடு மருத்துவமனையில் 354 பேர் சிகிச்சை பெற்றனர். இதில் 88 பேருக்கு கண்சிகிச்சையும் 40 பேருக்கு பற்சிகிச்சையும் 226 பேருக்கு பொது மருத்துவமும் அளிக்கப்பட்டது.

அடம்பன் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையத்தில் 296 பேருக்கு பொது மருத்துவமும் 125 பேருக்கு கண் சிகிச்சையும் 140 பேருக்கு பற்சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

இந்த நடமாடும் மருத்துவ சேவையில் 84 பேர்கண்ணாடி வழங்கப்படவேண்டியவர்களாகவும் 42 பேர் கற்றாக் சத்திர சிகிச்சை செய்யப்படவேண்டியவர்களாகவும் இனம் காணப்பட்டனர். (த)

## முன்பள்ளிக் கலைநிகழ்வு

ஒட்டுசுட்டான்,ஓக.18

ஒட்டுசுட்டான் கோட்ட மட்டத்திலான முன்பள்ளிகளுக்கிடையிலான கலை நிகழ்வுப் போட்டிகள் 15 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அலுவலகத்தில் பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

இதில் 11 முன்பள்ளிகள் பங்குபற்றின. 'அருணா முன்பள்ளி', 'பண்டாரவன்னியன் முன்பள்ளி', 'பரந்தாமன் முன்பள்ளி', 'தசன் முன்பள்ளி' ஆகிய முன்பள்ளிகள் வலய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன. (த-341)

# முல்லைத்தீவு பிரதான வீதிகள் புனரமைக்கப்படாதநிலையில்!

## பொதுமக்கள் விசனம்

ஒட்டுசுட்டான், ஓக.18

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பல பிரதான வீதிகள் திருத்தப்படாது உள்ளதால் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதிக்கான திருத்த வேலைகளுக்குக் கடந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், இன்றுவரை அவ்வீதியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று, மாங்குளம் - முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி ஆகிய பிரதான வீதிகளிலும் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதுதொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனமெடுத்து வீதிகளைத் திருத்த ஆவனசெய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-341-202)

## நுண்கலைக் கல்லூரி திறப்புவிழா

ஒட்டுசுட்டான்,ஓக.18

தமிழீழ நுண்கலைப் பிரிவின் மல்லாவி நுண்கலைக் கல்லூரி, எதிர்வரும் 21ஆம் திகதி மல்லாவி மத்தியகல்லூரிக்கு அருகில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கலை ஆர்வலர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு நுண்கலைக் கல்லூரி செயற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (8-341)

## பண்டார வன்னியன் நினைவு தினம்

கிளிநொச்சி,ஓக.18

வன்னியின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் நினைவு நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 25ஆம் திகதி முல்லைத்தீவு கற்சிலைமடுவிலுள்ள பண்டாரவன்னியன் சிலையுள்ள வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமை வகிப்பார். (8-202)

# திலீபன் மருத்துவ நிலையங்களில் ஜூலைமாதம் 11ஆயிரம்பேர் சிகிச்சை

கிளிநொச்சி,ஓக.18

தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை நிலையங்களில் கடந்த ஜூலை மாதம் 11 ஆயிரத்து 150 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பூநகரியில் ஆயிரத்து 116 பேரும், கற்சிலைமடுமில் 2 ஆயிரத்து 492 பேரும், பிரமந்தனாறில் ஆயிரத்து 782 பேரும், கதிரவெளியில் 385 பேரும் நவ்வியில் 360 பேரும் -

மாங்குளத்தில் ஆயிரத்து 221 பேரும், பன்சேனையில் 810 பேரும், ஐயன்கன் குளத்தில் 512பேரும், ஆழியவளையில் ஆயிரத்து 98 பேரும், அளம்பிலில் ஆயிரத்து 394 பேரும், சிகிச்சை பெற்றுள்ளதாக மருத்துவ சேவையினரின் புள்ளிவிரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் வைரஸ் காச்சலுக்கு ஆயிரத்து 480 பேரும், சுவாசத் தொற்றுநோய்களுக்கு ஆயிரத்து 635 பேரும் தோல் நோய்களுக்கு 450 பேரும் சிகிச்சைபெற்றுள்ளனர். (8-202)





யு.என்.எச்.சி.ஆர். நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் 'போரூட்' நிறுவனமும் இணைந்து வருமான அதிகரிப்புத் திட்டத்தின்கீழ் தர்மபுரம் கிழக்கு கிராமத்தைச் சேர்ந்த 75 குடும்பங்களுக்கு பல்வேறு பொருள்களை அண்மையில் வழங்கின.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத் தலைவர் க.சண்முகவேலாயுதம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கண்டாவளைப் பிரதேச உதவிப் பணிப்பாளர் நா. கீதன், கரைச்சி வடக்கு நிறுவன இணைப்பாளர் து.மகேந்திரராசா ஆகியோர் பயனாளிகளுக்குக் கிடுகு வழங்குவதை முதலாவது படத்திலும் -

யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி, பயனாளி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி ஒன்றை வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்:- பரந்தன் செய்தியாளர்)*

## தபால் விநியோகம் சீரில்லை

ஒட்டுசுட்டான்,ஓக.18

ஒலுமடு, கரிபட்டமுறிப்பு பகுதிகளில் சீரான தபால் விநியோகம் நடைபெறுவதில்லை என ஒலுமடுகமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி சு.இராசலட்சுமி தெரிவித்துள்ளார்.

ஒலுமடு, கரிபட்டமுறிப்பு பகுதிகளில் தபால் விநியோகம் காலதாமதமாவதால், அலுவலகம் சார்ந்த கடிதங்கள் நேரகாலத்துடன் கிடைப்பதில்லை எனவும் தபால் விநியோகம் சரியாக நடைபெற ஆவன செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (8-341)

# முல்லை. தொழில்நுட்பக் கல்லூரிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

ஒட்டுசுட்டான்,ஓக.18

முல்லைத்தீவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற விரும்புவோருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் வைரமுத்து தெரிவித்தார்.

கட்டட நிர்மாணப் பணிப்பாளர், தச்சுவேலை, மின்ஒட்டு, நீர் குழாய் பொருத்துதல் போன்ற பயிசிகளில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகுமெனவும் இப்பயிற்சி 3 மாதம் முதல் 6 மாதம் வரை நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தரமான பயிற்சியாக இது அமையும். இதற்கான அடிப்படைக் கொடுப்பனவாக துவிச்சக்கரவண்டி ஒன்றும் பயிற்சி முடிவில் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணத் தொகுதி என்பன வழங்கப்படுமெனவும் அவர் மேலும் கூறினார்.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோர், விசேட தேவைக்குட்பட்டோர், பெற்றோரை இழந்தோர், கணவனை இழந்தோர், சிறைமீண்டோர் என்போருக்கு இப் பயிற்சியில் முன்னுரிமை வழங்கப்படும்.

17 வயது முதல் 45 வயதுக்குட்பட்டோர் இதற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (8-301)

# கிளிநொச்சி மாவட்ட சாரணர்களுக்கான பயிற்சி

முழங்காவில்,ஓக.18

கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கம் கலைக்கூறு IV உயர்பயிற்சியை நடத்தவுள்ளது.

கலைக்கூறு IV உயர் பயிற்சி பெறாத கலைக் கூறு II பயிற்சியை முடித்த சாரணர் தலைவர்கள் , குருளை சாரணர் தலைவர்கள் ஆகியோருக்கு மேற்படி பயிற்சி நடத்தப்படவுள்ளது.

தகுதியுடையவர்கள் மாவட்ட பயிற்சி செயலாளர் கலாநிதி மா.புவனேந்திரனுடன் பலாலி வீதி , திருநெல்வேலி,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறும்-

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி மாலை 5 மணிக்கு வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திற்கு வருகை தருமாறும் மாவட்ட சாரணர் ஆணையாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இப்பயிற்சிக்கு விண்ணப்பங்களை அனுப்பாத சாரணர்கள் உடன் தொடர்புகொண்டு சாரணக் கூறு IV உயர் பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கலைக்கூறு III புத்தகத்தை உரியமுறையில் பரிபூரணப் படுத்திக் கொடுத்து பயிற்சியை உறுதிப் படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (8-323-[illegible])

# சந்தேகநபர்கள் பயன்படுத்திய பொருள்கள் மரபணுச் சோதனைக்கு

கொழும்பு,ஒக.18

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சுட்டுக்கொன்றவர்கள் பயன்படுத்தினார்கள் என்று கூறப்படும் பொருள்கள் சில மரபணுச் சோதனைக்கு உட்படுத்தப் படவுள்ளன.

இதற்கான அனுமதியை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் அஜித் அபேவர்தன நேற்றுமுன்தினம் வழங்கினார்.

கொலையைச் செய்தவர்கள் பயன்படுத்தினார்கள் என்று கருதப்படும் சிகரெட்டின் அடிப் பகுதி, சந்தேகநபர்கள் இருந்தார்கள் என்று கூறப்படும் பகுதிகளில் காணப்பட்ட 16 பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்கள், கண்ணாடி கிளாஸ் ஒன்று ஆகியவற்றை மரபணுச் சோதனைக்கு உட்படுத்த அனுமதிக்குமாறு குற்றப் புலனாய்வுப்பிரிவுப் பொலீஸார் விசேட கோரிக்கை மனு ஒன்றை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

இதன் அடிப்படையில் அந்தப் பொருள்களை பொரளையில் உள்ள 'ஜீன் ரெக்' நிறுவனத்தில் மரபணுச் சோதனைக்கு உட்படுத்தி அது தொடர்பான அறிக்கையை விரைவில் நீதிமன்றிற்குச் சமர்ப்பிக்குமாறு பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (க)

# புலிகளைப் பேச்சு மேசைக்கு அரசு கொண்டுவரவேண்டும்

## வலியுறுத்துகிறது ஐ.தே.க.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைச் சம்பவத்தை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலைகளுக்கு இடையேயும் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஜனாதிபதி கொண்டுள்ள நிலைப்பாட்டை வரவேற்றுள்ள ஐ.தே.க.,அரசு பொதுக்கட்டமைப்பை உடனடியாக நடைமுறைப்படுத்தி புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவரவேண்டுமெனவும் வலியுறுத்தியிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் ஐ. தே.க. செய்தியாளர் மாநாடு நடைபெற்றது. ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களாக ராஜித சேனாரட்ன, ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்ட இந்தச்செய்தியாளர் மாநாட்டில் ராஜித சேனாரட்ன எம்.பி. கூறியதாவது:-

அமைச்சர் கதிர்காமராலும் பேரினவாதத்தை அடிப்படையாகக்கொண்டு செயற்பட்ட ஜே.வி.பி., ஹெல உறுமய போன்றவர்களின் செயற் பாடுகளாலும்தான் நாட்டுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, கதிர்காமரின் கொலைக்கான முழுப்பொறுப்பையும் இவர்கள் தான் ஏற்கவேண்டும்.

அமைச்சர் கதிர்காமரின் மறைவிக்குப் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையை நாம் வரவேற்கிறோம். உண்மையான பிரச்சினையின் கருப்பொருளை உணர்ந்து ஜனாதிபதி உரையாற்றியிருப்பதை நாம் ஏற்கிறோம். அதிகாரப் பரவலாக்கலின் அவசியம் என்றுமில்லாதவாறு தற்போது உணரப் படுகிறது. இந்த விடயத்தில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டில்தான் ஐ.தே.கவும் உள்ளது - என்றார். (க)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மக்கள் வங்கியின் மானிப்பாய்
மைந்தன்

**துரைசிங்கம் ரகு**

*அவர்கள்*
*மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றமையினையிட்டு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ விநாயகரை வேண்டுகின்றோம்.*



**தர்மரூபன் காட்வெயார்**
மானிப்பாய்.

(38967) (24-13-15)


# வாழும் கலைப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக.18

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் வாழும் கலைப்பயிற்சி நிறுவனத்தினர் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் யோகாசனம், தியானம், மூச்சுப் பயிற்சி போன்றவற்றை நடத்திவருகின்றனர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றுவரும் இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 20ஆம், 21ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் இந்த நிகழ்வுகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(9-203-202)

# இளைஞர் இருவர் காயம்!

கோப்பாய் பாலத்தடிப் பகுதியில் இடம்பெற்ற லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் தச்சந்தோப்பு, கைதடியைச் சேர்ந்தவர்களான இரத்தின சிங்கம் பிரஸ்நோத் (வயது 21), சிவராஜா தினேஸ்குமார் (வயது 22) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்களில் பிரஸ்நோத் கைமுறிந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துடன் சம்பந்தப்பட்ட லொறி நிறுத்தாமல் சென்றுவிட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(9-12-ரி)


உ
ஓம்
*அரி ஓம் நமோ நாராயணா*

## யாழ். கோப்பாய் வடக்கில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ சக்கராழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவ *விஞ்ஞாபனம் - 2005*

*பேரன்புடைய ஸ்ரீமத் நாராயண பக்தர்களே!*

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சக்கராழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை (18-08-2005) பகல் 12 மணியளவில் நிகழும் தேவசங்க சுபவேளையிலும் திருவோண நட்சத்திரத்திலும் கொடியேற்றம் நடைபெறும். தொடர்ந்து 12 நாள்கள் உற்சவம் சிறப்பாக நடைபெறும்.

ஏனைய விசேட உற்சவ விவரங்கள்:

19-08-2005 வெள்ளிக்கிழமை - வரலட்சுமி விரதம்
24-08-2005 புதன்கிழமை - ஈஸ்வரிமார் திருநாள்
(ஈஸ்வரிமார் தீபமேற்றல் மாலை 5.30இற்கு நடைபெறும்)
25-08-2005 வியாழக்கிழமை - வேட்டைத் திருநாள்
26-08-2005 வெள்ளிக்கிழமை - சப்பரத் திருநாள்
27-08-2005 சனிக்கிழமை - உறியடி உற்சவம்
(மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்)
28-08-2005 ஞாயிற்றுக்கிழமை - தீர்த்த, கொடியிறக்க நாள்
29-08-2005 திங்கட்கிழமை - பூங்காவனம்
30-08-2005 செவ்வாய்க்கிழமை - ஆஞ்சநேயர் பொங்கல்

குறிப்பு: ★ *காலைப் பூசைகள் முற்பகல் 9.30 மணிக்கும் மாலைப் பூசைகள் மாலை 5.30 மணிக்கும் தினந்தோறும் ஆரம்பமாகி நடைபெறும்.*
★ *12 நாள்களும் அன்னதானம் நடைபெறும்.*

*அடியார்கள் ஆசார சீலராக வந்து கண்ணனருளைப் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக!*

பிரசுர அனுசரணை:
**சிறி விவேகா நகைமாடம்**
இல.131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
உங்கள் தங்க நகை ஆபரணத் தேர்விற்கு யாழ்.நகரில் நம்பிக்கை மிகுந்த நிறுவனம்
சிறி விவேகா நகைமாடம்.
T.P. 021 222 5501
(சி-44517) (21-15-13-24)



உ
மருதடியான் துணை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பிராந்திய முகாமையாளராகப் பதவியுயர்வுபெற்ற
**உயர்திரு. துரைசிங்கம் ரகு** அவர்கள்

**மக்கள் சேவையே தன் மூச்சாகக் கொண்டவர்**
**பண்பின் சிகரமாய் வாழ்ந்து வருபவர்**
**இன்முகத்துடன் வரவேற்பதே இவரது இயல்பு!**
**சமயப்பணிகள் இவரது உயிர்நாடி!**

*இவரது சேவை மேன்மேலும் உயர்வுற்றுப் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென எல்லாம்வல்ல மானிநகர் மருதடி விநாயகனை வேண்டி அவர்தம் பாதம் பணிகின்றோம்.*

**"சுந்தர்சன்"**
**யாழ்வீதி, மானிப்பாய்.**
T.P: **222 2751,4591569**

வாழ்த்துவோர்:
**உரிமையாளர், ஊழியர்கள்.**

(38966)(51-14-15-34)



## சிங்கர் நீர் பம்பியினால் முடியாதது என்றோ....... செய்ய இயலாதது என்றோ..... எவருக்கும் கூற முடியாது.




**இப்பொழுது நாடு பூராவும் கிடைக்கும் அளவிற்கு.........**
ஆமாம்! நாடெங்கிலுமுள்ள சிங்கர் காட்சியறைகள், அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்கள் மூலம் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் இது சாத்தியமாகின்றது.

**உதிரிப்பாகங்கள் வேண்டியளவிற்கு .......**
ஆமாம்! சிங்கர் பம்பிகள் இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்படுவதால் உதிரிப்பாகங்கள் பற்றிய அச்சமே உங்களுக்குத் தேவையில்லை. இவை தாராளமாக் கிடைக்கின்றன.

**இலகு தவணை கொடுப்பனவுத் திட்டத்தில் .....**
ஆமாம்! இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டத்தில் சிங்கர் பம்பிகள் வழங்கப்படுவதனால் எத்தரத்தவரும் இதனை வாங்கிக் கொள்ள முடிகின்றது.

**தண்ணீர் பம்பிகள் என்றதும் எப்போதும் ஞாபகத்திற்கு வரவேண்டியது சிங்கர் பம்பிகள் !!!**

**இப்போது ISO 9002 சர்வதேச தரச் சான்றிதழ்களுடன்**

யாழ் குடாநாட்டில் இவற்றைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்....
சிங்கர் காட்சியறைகள்
அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்
இல.538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021-2225408
விற்பனை கிளைகள்
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
இல.150, கண்டி வீதி, சாவ கச்சேரி. 0777-3174629

**SINGER®**
மாசற்ற மேன்மை
சிங்கர் (ஸ்ரீலங்கா) வரையறுக்கப்பட்டது
இல. 320, டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா மாவத்த, கொழும்பு. தொலைபேசி 022-421462/3, 2430301
www.singersl.com
CREATIVE SERVICES

**அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களால்**

# வடமராட்சி மீனவரின் வலைகள் நடுக்கடலில் வைத்து அறுப்பு

வடமராட்சிக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மீன்பிடிக்கச் சென்ற வடமராட்சி மீனவர்கள், இந்திய மீனவர்களின் தொல்லை காரணமாக கடற்றொழிலை மேற்கொள்ளாது ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர். இது சம்பந்தமாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வடமராட்சி மீனவர்கள் வடமராட்சி கடற்பகுதியில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்றும் - அவ்வேளை இழுவைப்படகுகள் போன்ற 500 இற்கும் மேற்பட்ட கடற்கலங்களில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் வடமராட்சி மீனவர்களின் வலைகளை அறுத்து அட்டகாசம் புரிந்தனர் என்றும் - கூறப்பட்டது. இதனால் வடமராட்சி மீனவர்கள் கடற்தொழிலை மேற்கொள்ளாது திரும்பியுள்ளனர். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். வடமராட்சி வடக்கு சமாசத்தினர் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கும் முறைப்பாட்டினைச் செய்துள்ளனர். (எ-173)


**G.A.Q. பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை ஆரம்பம் D.C.C.A**

TA.P. பாலமுரளி H.C.ஸ்ரீ P.Sc.பொன்சந்துரு Com.S.யசோ
Eco - E.G. வரன் Geo.K.கிரிதரன் Phi.KT.மோகன்
DRA. M.சந்திரன் His.S.சுஜிகரன் Mat. T.தவசேகர்
En-P.மதன் Log - K.T.மோகன் Enviro - K.கிரி (39018)

18, 20, 21, ஆகிய தினங்கள் காலை 8.30 இற்கு உங்கள் பதிவுகள் யாவும் அன்றைய தினமே

**D.C.C.A** மக்கள் வங்கி அருகில் ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.


## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**அமரர் கதிரிப்பிள்ளை தம்பிப்பிள்ளை**

தோற்றம்: 29.03.1938 மறைவு: 29.08.2004

திதி: 18.08.2005

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஓயவில்லை எங்கள் உள்ளம்
அன்புடனும் பண்புடனும் வாழ்ந்தவரே!
உங்கள் ஆத்மா சாந்தி வேண்டி நிற்கும்-

பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(39022)(38-12-12)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவி துஷாராவின் அன்புத் தந்தை

**அமரர் டானியல் வசந்தகுமார் குருஸ்**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினரிற்கு எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

28 ஆம் அணி,
மருத்துவ பீட மாணவர்கள்.

(39027(38-12-12)

## மரண அறிவித்தல்கள்

### இராஜேந்திரம் - தங்கரத்தினம்

சங்குவேலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரம் தங்கரத்தினம் 16.08.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற J.K.இராஜேந்திரத்தின் அன்பு மனைவியும் இராஜமலர், இராஜமோகன் (கனடா), இராஜமன்னன் (ஜேர்மனி), இராஜசேகரன் (கனடா), இராஜசிறி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பூபாலசிங்கம், திருபாலசிங்கம், மங்கையர்க்கரசி, சக்திவடிவேல், கமலாதேவி, தேவி, தியாகு ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவலோகநாதன் (யாழ்மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க உபதலைவர்), ரதி, நளினி, தயா, புவனேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கபிலன் (பிரான்ஸ்), கஜந்தன், கஜந்தினி, சர்மினி, நிலோஜினி, ரஜந்தன், நந்தினி, கவி, ஜானுகா, துதிகன், கவினா, கோகுலன், காயத்திரி, கோபிநாத், விக்கினேஸ்வரன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2005) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சங்குவேலி சங்கம்புலவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*சங்குவேலி வடக்கு,*
*சங்குவேலி.*

(39030)(38-12-12)

### திருமதி அன்னம்மா கபிரியேற்பிள்ளை
*(நல்லம்மா)*

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா கபிரியேற்பிள்ளை (நல்லம்மா) அவர்கள் 16.08.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை கபிரியேற்பிள்ளையின் அன்பு மனைவியும் ஜெயரட்ணம், அழகுரட்ணம், காலஞ்சென்ற விஜயரட்ணம், காலஞ்சென்ற குணரட்ணம், பாலரட்ணம், துரைரட்ணம், நவரட்ணம் ஆகியோரின் அன்புத்தாயாரும் மேரி திரேசா, டெய்சி, காலஞ்சென்ற ரிலியற், தவம், தரளம், தயா, ராஜி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 41/2, கோவில் வீதி இல்லத்தில் இன்று (18.08.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் யாழ்.கொஞ்சேஞ்சிமாதா ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியின் பின்பு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலரட்ணம் (மகன்).

*41/2, கோவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(39026)(38-12-12)

# மைதான மாற்றம் குறித்து அறிவிப்பு

தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் 'உதயனின்' ஊடக அனுசரணையுடன் ஸ்கந்த நட்சத்திர விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் ஜெய சோதி துஷ்யந்தன் (சுகந்தன்) ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்டத்தில் எதிர்வரும் 20,21 ஆம் திகதி நடைபெறவிருந்த ஆட்டத்தில் மைதானம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி 20, 21 ஆம் திகதிகளில் முறையே ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மானிப்பாய் இந் துக் கல்லூரி ஆகியவற்றில் நடைபெறவிருந்த போட்டிகள் அந்தக் கல்லூரிகளில் நடைபெறவுள்ள பரீட்சை காரணமாக யாழ். மத்தியகல்லூரியிலும், யாழ். பல்கலைக்கழக (மருத் துவபீட) மைதானத்திலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


**சாரதி தேவை**

கொழும்பிலே சேவையாற்ற சாரதி தேவை. உணவு - தங்குமிட வசதி செய்து தரப்படும். (39029)(38-17-12)

**தொடர்பு: 0777 - 393827**

**S.L.A.S. வகுப்புகள்**

ஆரம்பவிடயங்கள்: வெள்ளி 9 -1.00
சனி 3-6, ஞாயிறு 8-11 ஆகிய நேரப்பிரிவிலோ அல்லது
செவ்., புதன், வியாழன் 4.30 - 6.30 பிரிவிலே
சேர்ந்துகொள்ளலாம். (39028)(38-17-12)

**D.M.I.யாழ்.நகர்**

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த

**தாஸ்** (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.) (அ-43380) (அ-41187)

**மனோகரா** யாழ்ப்பாணம்

18 ஆம் திகதி வரை **பிரியசகி**

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
20 ஆம் திகதி முதல் மீண்டும்

**அந்நியன்**

விக்ரம், சதா, விவேக்

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.) (அ-44110)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத்,
ரேணுகா மேனன்

**பெப்ரவரி 14**

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** குளிரூட்டப்பட்டது ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக அர்ஜுன், சினேகா,கிரண், வடிவேல் நடித்த



**சின்னா**

கா.நே.: 10.30,2.30, 6.30,9.30. (பு.நே.) (அ-43363)


## மரண அறிவித்தல்

### சபாரத்தினம் சிவசுப்பிரமணியம்
(பத்தர் மணியம்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும்கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட ச.சிவசுப்பிரமணியம் நேற்று (17.08.2005) அதிகாலை காலமானார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற விஜயன், ஸ்கைலா, ரேகன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் இராஜவலோசனா, ஜெயபாலன், சோபா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சரஸ்வதி மற்றும் ஈஸ்வரி, செல்வவதி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2005) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.றேகன் (மகன்).

கலைமகள் வீதி,
கல்வியங்காடு.

(39019) (38-17-12)

# உதைபந்தாட்டம் நேற்றுமாலை பெறுபேறு

யாழ்ப்பாணம்,ஓக.18

ஏழு பாடசாலைகள் பங்குபற்றும் சமாதானக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று மாலை இடம்பெற்ற ஆட்டங்களில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, மன்னார் சென்.சேவியர், கொழும்பு பீற்றர்ஸ் கல்லூரி அணிகள் வெற்றிபெற்றன.

முதலில் நடைபெற்ற ஆட்டத்தில் மன்னார் சென் சேவியர் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணி மோதியது.

இதில் மன்னார் சென்.சேவியர்கலூரி அணி, எதிர்த்து விளையாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணியை 2:0 என்ற கோல்க் கணக்கில் வெற்றிகொண்டது.

இதைத் தொடர்ந்து இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, எதிர்த்து விளையாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை 3:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றிகொண்டது.

கொழும்பு சென்பீற்றர்ஸ் கல்லூரி அணிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்பீற்றர்ஸ் அணி எதிர்த்தாடிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை 7:1 என்ற கோல்க்கணக்கில் வென்றது. (மற்றொரு செய்தி 13 ஆம் பகக்த்தில்). (எ-190)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு
*(பாக்கியம்)*



யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் காரைநகர், மாப்பாணவூரியையும் ஊரெழுவையும் வசிப்பிடமாகவும் தற்காலிகமாக தாவடி வடக்கில் வசித்தவருமாகிய திருமதி. மகேஸ்வரி திருநாவுக்கரசு 15.08.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - செல்லம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் (முன்னாள் சாரதி, வ.பி.போ.சபை. காரைநகர்சாலை), குணராசா (குணா - குணாமோட்டர்ஸ் கொழும்பு), ஜீவராசா (சிவா-ஜேர்மனி), யோகராசா (மோகன் - குவைத்), உதயராணி (ராணி), பேரின்பராசா (ராஜா- கனடா) ஆகியோரின் அருமைத் தாயும் கலாஜோதி (கொழும்பு), ஜெயந்தினி (ஜேர்மனி), சாந்தமலர், யோகநாதன் (அதிபர், பயிற்சிப்பாடசாலை வ.பி.போ.சபை. கோண்டா வில்), கிருஷ்ணவேணி (ராதா - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் தபோதினி, தனஞ்சயன், சுதர்சன், சிறியுகன்,கோகுல் (ஜேர்மனி), கஜன் (ஜேர்மனி), கவிதா, கௌசிகா, கஜன், கணேசன், அஜந்தன், துஸ்ஷியந்தன் (லண்டன்), லக்ஸ்ஷிலா, தினேஷ், சஜீவ், பிரணவி (கனடா), வசிகரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08..2005) வியாழக்கிழமை காலை 11 மணிக்கு அவரது தாவடி இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*அரசடி லேன்,*
*தாவடி வடக்கு, கொக்குவில்.*
T.P.: 021-222 5093
Mobile : 0776153794

(39023)(38-17-12)

### சுப்ரமணியம் சிவசுப்பிரமணியம்
*(மதுவரித் திணைக்களம் - பருத்தித்துறை)*



வல்வெட்டி, கந்தப்பா வளவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் - சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (17.08.2005)புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் திருமதி இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் தயாளன் - சியாமா (கனடா), யாழினி - பாலமுகுந்தன் (U.K), ரூபன் (கனடா), சாந்தினி, குணாளினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஞானாம்பிகை, சரவணபவானந்தம், சச்சிதானந்தம், புஸ்பமலர் மற்றும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் சொர்ணாம்பிகை ஆகியோரின் அருமைச் சகோதரனும் பொன்னம்மா (கனடா), ஜோதிரட்ணம் (மலேசியா) மற்றும் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி நடராஜா, சிவமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (18.08.2005) வியாழக்கிழமை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1 மணிக்கு கல்கிசை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி.

No.23, 2nd Chapel Lane,
Wellawatte . T.P.: 2554815

(39019) (38-17-12)

### டானியல் வசந்தகுமார் குருஸ்
*(மருந்தாளர் - சுற்றயல் கூறு வைத்தியசாலை - காரைநகர்)*



மூதூரைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட டானியல் வசந்தகுமார் குரூஸ் அவர்கள் 16.08.2005 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் திருமதி சுந்தரவதனாவின் (ஆசிரியர் - யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும் துஷாரா (யாழ்.மருத்துவ பீடம் - முதலாம் வருட மாணவி), நிரோஷா (மாணவி, யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் தகப்பனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அராலி மத்தி., வட்டுக்கோட்டையில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் அன்னாரின் பூதவுடல் நாளை (19.08.2005) வெள்ளிக்கிழமை பி.ப. 5 மணியளவில் மூதூர் சந்தை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து இறுதிக்கிரியைகளுக்காக மூதூர் கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.*

(39033) (38-17-12)

# புலிகள் இயக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர்.

இன்று புதன்கிழமை 17.08.2005 காலை 08.30 மணியளவில் ஒரு கையை ஏற்கனவே இழந்து சுகவீனமுற்றிருந்த எமது இயக்க உறுப்பினராகிய கோபி எனப்படுபவர் விடு முறையில் தனது பெற்றோருடன் யாழ்ப் பாணம், கலட்டியில் உள்ள தனது வீட்டில் தங்கியிருந்த வேளையில் ஸ்ரீலங்கா படையின ராலும் பொலீஸாரினாலும் கடத்தப்பட்டுள் ளார். புதன்கிழமை காலை ஸ்ரீலங்கா படை யினராலும், பொலிஸாரினாலும் இவரது வீடு சுற்றிவளைக்கப்பட்டு, துப்பாக்கிப் பிரயோ கம் மேற்கொள்ளப்பட்டு இவரது குடும்பத்த வர், அயலவர் முன்னிலையில் கோபி அவ ரது வீட் டில் இருந்து கடத்தப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்காப் படையினராலும், பொலீஸா ரினாலும் மேற்கொள்ளப்பட்ட இக்கடத் தலை யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் வன்மையாகக் கண்டிப்பதோடு, இது அப் பட்டமான போர்நிறுத்த உடன்படிக்கை மீற லாகவும் உள்ளது என போர்நிறுத்த கண் காணிப்பு குழுவினரிடம் கையளிக்கப்பட்ட தமது கண்டனத்தில் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாகப் படையினரும், பொலீஸாரும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீது உள் நோக்கத்துடன் பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருவதைப் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் கவனத் திற்கு ஏற்கனவே யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் கொண்டு வந்திருந்தனர். வேண்டு மென்றே, திட்டமிட்ட வகையில் போர்நிறுத்த உடன்படிக்கையை வலுவற்றதாக்கும் உள் நோக்குடனேயே ஸ்ரீலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கோபியைக் கடத்திய சம்பவம் அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பின ராகிய கோபி அவர்கள் உடனடியாக விடு விக்கப்படாது விட்டால் கடுமையான நட வடிக்கை எடுக்கும் சூழ்நிலைக்கு விடுதலைப் புலிகள் தள்ளப்படுவார்கள் என்பதை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவினருக்கு தெரிவித் துள்ளனர் - என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9-15-8-86-ரி)

# பிரச்சினைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலுள்ள அரசியல்துறை நடுவப்பணியகத் தில் ரொய்ட்டர் செய்தியாளர்களுக்குப் பேட்டி யொன்றை வழங்கிய தமிழ்ச்செல்வன் அதில் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியி ருப்பதாவது:-

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத் தைப்பேணி அமைதியை உறுதிப்படுத்துவ தற்காக சமாதான முயற்சிகளை முன்னெடுப் பது குறித்தே நாம் ஆராய்கிறோம். போர் ஒரு மாற்றுத் தீர்வல்ல. ஆனால் போர் தமிழ்மக் கள் மீது திணிக்கப்பட்டால் அதனை எதிர் கொள்ள நாம் தயார். அரசின் கைகளிலேயே அது தங்கியுள்ளது. எவ்வாறாயினும் போர் நிறுத்த உடன்பாட்டை கடைப்பிடிப்பதில் நாம் மிகவும் உறுதியாக உள்ளோம் - என் றார். (எ-க)

# சுட்டுக்கொலை

வவுனியாவில் இளைஞர் ஒருவர் நேற்றிரவு 8.20 மணியளவில் சுட்டுக்கொல் லப்பட்டார்.

மதி என்பவரே சுட்டுக்கொல்லப்பட்ட வராவார். முன்னர் இவர் ரெலோ அமைப் பில் இருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அவசரகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்துக்கு முறையாக அறிவிப்பதற் காகவே இன்று நாடாளுமன்றம் விசேடமாகக் கூட்டப்பட்டது என அரச தரப்பில் அறிவிக்கப் பட்டது. இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதம் ஒன்றை இன்று நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. (எ-க)

# இன்றே நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னும் சிறிது காலத்தில் கலைக்கலாம். அதற்கு அவசரம் இல்லை.

ஆனால், ஜனாதிபதி இப்போது நாடாளு மன்றத்தைக் கலைக்கத் திட்டமிட்டதற்கு மற்றொரு காரணம் கூறப்படுகிறது. பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் பங்காளிக ளாக இருந்த ஜே.வி.பி.யினர் அரசிலிருந்து பொதுஜன ஐக்கியமுன்னணியிலிருந்தும் விலகி அரசின் பெரும்பான்மைப் பலத்தைச் சிதைத்துவிட்டார்கள். இப்போது அது சிறு பான்மை அரசாகிவிட்டது. எந்தக் கட்டத்திலும் அது கவிழ்ந்துவிடலாம். இந்த விரக்தியில் தான் இப்போதே நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜே.வி.பியினரை பழிவாங்கப் பார்க்கிறார் ஜனாதிபதி என்று கூறப்படு கிறது. ஜே.வி.பி.எம்.பிக்களில் பலர் நாடாளு மன்றத்துக்குப் புதியவர்கள். இப்போது நாடாளுமன்றத்தைக் கலைத்தால் அவர்களுக்கு (ஐந்து வருடங்கள் பூர்த்தியாகாத நிலை யில்) ஓய்வூதியம் கிடைக்காது. புதிய தேர் தலில் ஜே.வி.பியினர் பலர் மண் கவ்வுவார் கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி. பி. கூட்டுச் சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்குவதற்கு முன் ஜே. வி.பியினர் 16 பேர் மட்டுமே நாடாளு மன் றத்தில் எம்.பிக்களாக இருந்தனர்.

ஆனால், இப்போது ஜே.வி.பி. எம்.பிக் களின் எண்ணிக்கை 39 ஆகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 23 ஆசனங்களை ஜே. வி.பியினர் தமதாக்கிக் கொண்டுவிட்டனர். இப்போது நாடாளுமன்றத்தைக் கலைத்தால் ஜே.வி.பியின் 39 எம்.பிக்களில் 23 பேருக்கு ஓய்வூதியம் கிடைக்காது.

இதே நிலை எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் உட்பட மற்றும் பல எம்.பிக்க ளுக்கும் அரச கட்சியில் இருக்கும் புதிய எம். பிக்களுக்கும் ஏற்படும். தாம் பாதிக்கப்பட்ட வர்கள் என்ற காரணத்தினாலேயே அரச கட்சி யின் புதிய எம்.பிக்களும் அவர்களுக்கு ஆதரவாகப் பழைய எம்.பிக்களும் சிலரும் நாடாளுமன்றம் இப்போது கலைக்கப்படு வதை விரும்பவில்லை. ஆளும்கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருக்கு பின் வரிசை பிரதி அமைச்சர் அமைப்புக்களுக்கும் நாடாளுமன்றத்தைக் கலைப்பது பற்றி அதிருப்தி.

தற்பொழுது அரசின் கூட்டாளிகளாக இருக்கும் மக்கள் ஐக்கிய முன்னணி, இலங்கை சமசமாசக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, பேரி யல் அஷ்ரப்பின் தேசிய ஐக்கிய முன்னணி என்பனவும் தர்மசங்கடமான நிலைக்குத் தள் ளப்பட்டுள்ளன.

இதனால் அரசில் அங்கம் வகிப்பவர் களுள் பெரும்பான்மையானவர்கள் நாடாளு மன்றம் கலைக்கப்படுவதை விரும்பாதி னால் உள் வீட்டுக்குள் பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் அவர்தாம் எடுக்கும் முடிவை கடைசிவரை வெளியிடமாட்டார். அது தொடர்பாக எவ ருடனும் கலந்துரையாடவும் மாட்டார். அவர் தாம் நினைத்ததைச் செய்துமுடிப்பார் என் பது கடந்தகால அனுபவம். (எ-க)

# ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாதிக்க சட்டங்களின் பிரகாரம் மேன்முறை யீட்டு நீதிமன்றிலோ, உயர் நீதிமன்றிலோ தாக்கல் செய்யப்படும் மனுக்களுடன் நீதிய ரசர்கள் அல்லது நீதிபதிகளுக்குத் தொடர்பு இருந்தால், அந்த வழக்கை அவர்கள் விசா ரணை செய்ய முடியாது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது முதலாவது பதவிக் காலத்திற்கான சத்தியப் பிரமாணத்தினையும், சர்ச்சைக்குரிய இரண் டாவது பதவிப்பிரமாணத்தையும் பிரதம நீதியரசர் முன்பாகவே மேற்கொண்டார்.

ஜனாதிபதி தனது இரண்டாவது பதவிக் காலத்துக்கான பதவிப் பிரமாணத்தை பிர தம நீதியரசர் முன்பாக 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரகசியமாகச் செய்து கொண்டார் என்றும் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு நேரடியாகத் தொடர்பு பட்ட நிலையிலுள்ள பிரதம நீதியரசர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான மனுக்கள் மீதான விசா ரணையைத் தலைமையேற்று நடத்துவதே சட்டத்துறை வட்டாரங்களில் பெரும் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரதம நீதியரசர் சம்பந்தமான இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி, மாற்றுக் கொள் கைகளுக்கான நிலையம் நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது. அதில் ஜனாதிபதியின் இரண் டாவது பதவிக் காலத்துக்கான சர்ச்சையில் பிரதம நீதியரசர் நேரடியாகத் தொடர்புபட்டி ருக்கிறார் என்பதால், ஜனாதிபதித் தேர்தல் குறித்த மனுக்கள் மீதான விசாரணையில் அவர் பங்கேற்கக்கூடாது என்று தனது மனு வில் அந்த அமைப்பு கேட்டிருக்கிறது. அதற் குப் பதிலாக 9 நீதியரசர்களைக் கொண்ட விடேச குழு ஒன்றே அவற்றை விசாரணை செய்ய வேண்டும் என்றும் அது கோரியுள் ளது.

எனினும், பிரதம நீதியரசர் தலைமையி லான குழுவே ஜனாதிபதித் தேர்தல் தொடர் பான மனுக்களை விசாரிக்கும் என்று நேற்று உயர் நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

# இணுவில் சம்பவத்துடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக் கழகத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இரு பொலிஸார் காய மடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படு காயமுற்ற பொலீஸ் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியான ஹமீத் என்பவரும் சார்ஜன்ட் ஜயவத் என்பவரும் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டனர். பின்னர் அவர்கள் ஹெலி மூலம் கொழும்புக்குக் கொண்டு செல் லப்பட்டனர். அவர்கள் இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், இணுவில் பகுதியில் கடந்த 4ஆம் திகதி கடத்திக் கொலைசெய்யப்பட்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த் தனவின் கொலையுடன் தொடர்புடைய சந் தேகநபரொருவரைக் கைது செய்து பொலிஸ் ஜீப்பில் அவரை ஏற்றிக்கொண்டு செல்ல முற் படுகையிலேயே பல்கலைக்கழகத்துக்கு முன்னால் உள்ள வீடொன்றிலிருந்து இனந் தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

அதேசமயம், தனது பெற்றோரைச் சந் திக்க வந்திருந்த போராளி கோபியை அவ ரது வீட்டுக்குள் புகுந்த படையினரும் பொலீ ஸாரும் இணைந்து கைதுசெய்துகொண்டு சென்றுள்ளனர். என்று செய்திகள் தெரிவிக் கின்றன.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணி யளவில் கலட்டிச் சந்திப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.கோபி என்று அழைக்கப்படும் கதிரமலை வைதீகன் (வயது -33) என்ற போராளியே கைதுசெய்யப்பட்டவராவார். கைதானவர் இவர்தான் என்பதைப் பொலீஸாரும் உறுதிப்படுத்தினர்.

திடீரென ஏராளமான ஜீப்புகளில் வந்தி றங்கிய படையினரும், பொலீஸாரும் குறிப் பிட்ட போராளி தங்கியிருந்த வீட்டைச் சுற்றி வளைத்துள்ளனர். உள்ளே நுழைந்த சில படையினர் கிணற்றடியில் பல்துலக்கிக் கொண் டிருந்த போராளியைக் கைதுசெய்து கொண்டு சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் துப்பாக்கிச் சூட்டில் காய மடைந்தார்கள் என்று தெரிவித்து இரண்டு பொலிஸார் நேற்றுக்காலை யாழ். வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

யாழ்.பொலீஸ் நிலையத்தில் பணியாற் றும் தென்னிலங்கையைச் சேர்ந்த ஜயவத் (வயது-30), எம்.எம். ஹமீத் (வயது- 36) ஆகிய இரு பொலீஸாருமே காயமடைந் துள்ளனர். என மருத்துவமனை வட்டாரங் கள் தெரிவித்தன. இருவரும் பின்னர் கொழும்புக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை-நேற்று முழுவதும் யாழ். பொலீஸ் நிலையத்தில் சிவில் செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டு பொலீஸ் நிலையம் மூடப்பட்டிருந்தது. அங்கும் பாது காப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

(ஐ-9-7-8-15-86-51-190)

# புரிந்துணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய யோசனைகளைத் தெரிவித்துள்ளனர். அவை உடனடியாக வன்னியில் உள்ள புலி களின் தலைமைக்குத் தெரியப்படுத்தப்பட் டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு வந்தி ருந்த ஜான் பீற்றர்ஸன், விடார் ஹெல்கிஸன் மற்றும் நோர்வே வெளிவிவகார அமைச் சின் உயர் அதிகாரி ஒருவர் ஆகியோரே நாடு திரும்பும் வழியில் நேற்று லண்டன் வந்து புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத் தைச் சந்தித்துப் பேசினர். அதற்கு முன்ன தாக - கடந்த திங்கட்கிழமை இரவு ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து தற் போதைய அரசியல் நிலைவரம் குறித்து கலந்துரையாடினர்.

அமைச்சர் கதிர்காமரின் கொலைக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசி யல் நிலைமை குறித்து நோர்வே அமைச்சர் கள் நேற்று பாலசிங்கத்துக்கு விளக்கினர். அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்து கள் குறித்தும் எடுத்துக் கூறினர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக் கடி நிலைமை மற்றும் பதற்றத்திற்கு மத்தி யில் அமைதி நிலையைத் தொடர்ந்து பேணு வதற்கும் போர் நிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாகக் கடைப்பிடிப்பதற்கும் தேவை யான புதிய யோசனைகள் சிலவற்றையும்

நோர்வே அனுசரணையாளர்கள் பால சிங்கத்திடம் தெரிவித்துள்ளனர். இந்த விட யத்தில் உலக நாடுகள் கொண்டுள்ள கவலை குறித்தும் அவர்கள் தெரிவித்தனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பேணுவதில் அரசு உறுதியாக இருக்கின்றது என்று ஜனாதிபதி தமக்கு அளித்த உறுதி பற்றியும் அவர்கள் எடுத்துக் கூறினர்.

எனினும் இந்தச் சந்திப்பின் போது பேசப் பட்ட முக்கிய விடயங்களை வெளியே தெரி விப்பதில்லை என்றும் இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர். இந்தச் சந்திப்பின்போது பாலசிங்கத்தின் பாரியாரான அடேல் பால சிங்கமும் உடனிருந்தார்.

நேற்றைய சந்திப்பின்போது நோர்வே அனுசரணையாளர்களால் தெரிவிக்கப்பட்ட புதிய யோசனைகள் குறித்த விபரம் உடனடி யாகப் புலிகளின் வன்னித் தலைமைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து புலி களின் தலைமை தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது என்றும் கூறப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை இரவு நோர்வே அனுசரணைக் குழுவினர் ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசினர் என்பது குறிப்பிடத் தக்கது.

# கதிர்காமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் முழுநாள்விவா தத்தை நடத்து வதற்கு நேற்றைய கூட்டத்தில் இணக் கம் காணப்பட்ட துடன் அதற்கான திகதியை பின்னர் கட்சி தலைவர்களின் கூட்டத்திலேயே கூட் டித் தீர்மானிப்ப தென்றும் நேற்று முடிவு செய்யப் பட்டது. (எ-க)

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரன் கனகாம்பிகை



திருமகள் வீதி, அரியாலையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரன் கனகாம்பிகை 15.08.2005 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல் லம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்ற சைவங்கணபதிப்பிள்ளை - தங் கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் மகேஸ் வரனின் அன்பு மனைவியும் மகேஸ்கண்ணா, சுதாகர், சுமதி, சுகந்தினி (ஆசிரியை, முல்லைத்தீவு), ஆகியோ ரின் அன்புத் தாயும் விஜிதா, ரஜனி, கர்ணராஜா, மோகனகுமார் (North Sea ltd) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி மங் யர்க்கரசி விநாயகமூர்த்தி, சந்திரசேகரம், திருமதி ஜெகஜோதி வசந்தகோகிலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாக்கியலட் சுமி, சீதாலட்சுமி, கனகலிங்கம், உருத்திரசிங்கம், காலஞ்சென்ற தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மயூரி, யதுசிகா, சிந்திகா, பிரிதிகா, தனுசன், டிலுக்சன், யதுஷன், சஹானா ஆகி யோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2005) வியா ழக்கிழமை 24, திருமகள் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியை களுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுதாகர்
(மகன் - நோர்வே)

(39032) (38-12-17)

S.L.A.S பரீட்சைக்கான
விரிவுரைகள் 20.08.2005-10 A.M.
aat Foundation 3rd Batch
இறுதிப் விரிவுரைகள் 20.08.2005-9.30 A.M.
aat Intermediate & Final
இறுதிப் விரிவுரைகள் 20.08.2005-9.00 A.M.
ஆரம்பம் 09 2005
Only 750/-
3 Months
தொடர்புகளுக்கு :- Career. Com Institute
# 167, 1st Cross st, Jaffna.
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
T.P: 0773039448, 0776155968
(ஐ-44543)(38-12-17)

43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811
Dip. in AutoCAD
Dip. in Internet E-Mail
தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம்
20,24.08.2005

G.A.Q
பரீட்சைக் கருத்தரங்கு
20, 21, 22, 23, திகதி
D.C.S நிறுவனம்
திகதி K.K.S.வீதி, இணுவில். (39082)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.